
# ஜீவநதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

JUNE 2026



SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

ஷார்ஜா தமிழ் திருச்சபை - கன்னியாகுமரி பேராயம்
SHARJAH TAMIL CONGREGATION - KANYAKUMARI DIOCESE

# ஜீவநதி

## ஜூன் 2026 - இதழ் 226

**“பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.” யோசுவா 1:9**

## SHARJAH TAMIL CONGREGATION

### (CSI KANYAKUMARI DIOCESE)

P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576

For private circulation only

# அனுதின மன்னா

**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம். (யோவான் 17:17)**

| தேதி | நாள் | காலை | மனன வசனம் | அதிகாரம் | மாலை |
|---|---|---|---|---|---|
| 1 | திங் | எபே. 4:3-6 | உங்களுக்கு … உண்டு | 4:4 | ஆதி. 12:1-15 |
| 2 | செவ் | 2கொரி. 1:20-24 | உங்களோடேகூட … கொடுத்திருக்கிறார் | 1:21,22 | எபே. 1:3-14 |
| 3 | புத | 1பேது. 1:1-12 | பிதாவாகிய … பெருகக்கடவது | 1:2 | யோவா. 10:22-39 |
| 4 | வியா | 2கொரி. 13:11-14 | பரிசுத்தவான் … சொல்லுகிறார்கள் | 13:13 | ஆதி. 1:1-28 |
| 5 | வெள் | மத். 11:25-30 | அந்த … ஸ்தோத்தரிக்கிறேன் | 11:25 | 1யோ. 4:7-15 |
| 6 | சனி | மத். 3:13-17 | அன்றியும் … உரைத்தது | 3:17 | பிலி. 2:1-11 |
| 7 | ஞா | அப். 18:25-28 | அவன் … காண்பித்தார்கள் | 18:26 | மாற். 1:21-28 |
| 8 | திங் | லூக். 2:42-52 | மூன்று … கண்டார்கள் | 2:46 | மாற். 3:13-15 |
| 9 | செவ் | நீதி. 22:1-6 | பிள்ளையானவர் … விடாதிருப்பான் | 22:6 | மத். 5:13-16 |
| 10 | புத | யாத். 2:1-10 | அப்பொழுது … என்றாள் | 2:7 | யோவா. 13:1-20 |
| 11 | வியா | சங். 78:1-8 | என் வாயை … வெளிப்படுத்துவேன் | 78:2 | யோவா. 13:31-35 |
| 12 | வெள் | யோவா. 6:5-13 | இங்கே … என்றான் | 6:9 | லூக். 2:41-52 |
| 13 | சனி | 2இராஜா.22:1-7 | அவன் … நடந்தான் | 22:2 | மத். 23:23-28 |
| 14 | ஞா | யோபு 12:1-12 | இப்போதும் … விவரிக்கும் | 12:7,8 | சங். 104:1-15 |
| 15 | திங் | ஏசா. 43:16-21 | இந்த … வருவார்கள் | 43:21 | லேவி. 25:8-22 |
| 16 | செவ் | சங். 104:24-30 | கர்த்தாவே … நிறைந்திருக்கிறது | 104:24 | யோபு 12:1-12 |
| 17 | புத | கொலோ. 1:15-21 | ஏனென்றால் … சிருஷ்டிக்கப்பட்டது | 1:16 | ஆதி. 29:1-30 |
| 18 | வியா | ரோம. 8:19-23 | மேலும் … கொண்டிருக்கிறது | 8:19 | சங். 19:1-6 |
| 19 | வெள் | லூக். 12:22-28 | காகங்களை … விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் | 12:24 | சங். 119:73-80 |
| 20 | சனி | வெளி. 22:1-5 | நகரத்து … ஏதுவானவைகள் | 22:2 | ஓசி. 6:1-5 |
| 21 | ஞா | சங். 100 | மகிழ்ச்சியோடே … வாருங்கள் | 100:2 | யாத். 4:21-31 |
| 22 | திங் | ஏசா. 6:1-8 | உசியா … நிறைந்திருந்தது | 6:1 | அப். 8:26-31 |
| 23 | செவ் | லூக். 18:9-14 | அவனல்ல … என்றார் | 18:14 | மத். 15:7-9 |
| 24 | புத | யோவா. 3:22-36 | அவர் … வேண்டும் | 3:30 | சங். 100:1-3 |
| 25 | வியா | அப். 2:42-47 | அவர்கள் … தரித்திருந்தார்கள் | 2:42 | லூக். 16:1-17 |
| 26 | வெள் | 2நாளா. 20:16-21 | அப்பொழுது … தாழவிழுந்தார்கள் | 20:18 | அப். 2:29-36 |
| 27 | சனி | மாற். 12:28-34 | உன் தேவனாகிய … என்றார் | 12:30,31 | யூதா 1:7-25 |
| 28 | ஞா | யோவா. 8:31-38 | இயேசு … சீஷராயிருப்பீர்கள் | 8:31 | யோவா. 12:20-26 |
| 29 | திங் | மத். 28:16-20 | நான் … ஆமென் | 28:20 | ரோம. 14:1-12 |
| 30 | செவ் | ரோம. 10:9-17 | ஆதலால் … வரும் | 10:17 | எரே. 1:4-19 |

# சபை ஆயரிடமிருந்து...

**"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிச் சிறப்புடன் நடத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." 2 கொரிந்தியர் 2:14**

அன்பான தேவப்பிள்ளைகளே!

இந்த மாத இதழின் வாயிலாக உங்களுடன் மீண்டும் உரையாடும் வாய்ப்பு கிடைத்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. கடந்த மாதம் முழுவதும் தனது அன்புக் கரங்களால் நம்மைக் காத்து வழிநடத்திய இறைவனுக்கு நமது நன்றியையும் துதியையும் செலுத்துவோம்.

இந்நாட்களில் வெயிலின் தாக்கமும், காலநிலையின் மாற்றங்களும் அதிகரித்து வருகின்றன. இருந்தபோதிலும், நம் வாழ்க்கையை பாதுகாப்புடன் நடத்திவரும் தேவனின் கிருபையை நினைத்து நன்றியுள்ளவர்களாக இருப்போம். மனித முயற்சியால் மட்டுமே வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுக்க முடியாது, ஆண்டவரின் துணையும் கிருபையும் அவசியமானவை என்பதை உணர்ந்து, அவருடைய வழிநடத்துதலோடு இந்த புதிய மாதப் பயணத்தைத் தொடர்வோம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற திருச்சபை பணிகள் அனைத்தும் உங்கள் ஆர்வமிக்க பங்களிப்பும், தொடர்ந்த ஜெப ஆதரவும் காரணமாக சிறப்பாக நிறைவேறின. அதற்காக ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். குறிப்பாக மே 10-ஆம் தேதி நடைபெற்ற சிறப்பு தொழுகையை சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்திய சகோதரர்களுக்கும், மருத்துவத்துறை அனைவருக்கும் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன். மற்றும் சிறப்பு பாடலை பாடிய சகோதரர்கள் மற்றும் மருத்துவத் துறையினரை மனதார பாராட்டுகின்றேன். அந்நாளின் ஆராதனை நமக்கு ஆசீர்வாதமானதாக இருந்தது. ஆண்டவர் தாமே அவர்களை தொடர்ந்து அவர் நாம மகிமைக்காக நம்முடைய திருச்சபையில் பயன்படுத்துவராக.

ஆண்டவரின் பெரிதான கிருபையினால் நமது திருச்சபையின் அடுத்த மூன்றாண்டுக்கான சபைக்குழு அங்கத்தினருக்கான தெரிவு பேராயருடைய அறிவுரையின் அடிப்படையில் கடந்த மே 3-ஆம் தேதி நடைபெற்றது.

சபை பொதுக்கூடுகையில் தேவைப்பட்ட சபைக்குழு அங்கத்தினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். புதிதாக பொறுப்புகளை ஏற்றிருக்கும் சபைக்குழு அங்கத்தினர்களுக்கு வாழ்த்துகளை கூறிக் கொள்கின்றேன். இந்நாள்வரையிலும் நம்முடைய திருச்சபையின் திருப்பணிகளைச் செய்துவரும் சபைக்குழு அங்கத்தினர்கள், ஜூனியர் சர்ச், பெண்கள் சங்கம் மற்றும் பாடகர் குழுவின் பொறுப்பாளர்கள் அனைவரையும் வழ்த்துகிறேன். மேலும் நமது திருச்சபையின் ஆடிட்டர், வார்டன், ஒலி ஒளி அமைப்பாயர் என ஒவ்வொருவருக்கும் ன்றிகளை கூறிக்கொள்கின்றேன். ஆண்டவர் தாமே வருகின்ற நாட்களிலே நம்முடைய திருச்சபையில் திருப்பணிகளை ஆசிர்வதித்து தருவாராக.

நாம் தற்போது வாழ்ந்து பணிபுரியும் இந்த தேசத்தில் பலர் பலவிதமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றோம். வேலைச் சுமைகள், மனஅழுத்தங்கள், தடைகள், வேலை நிலைத்தன்மை குறைவு போன்ற பல சூழ்நிலைகள் இருந்தாலும் மனம் தளராமல், கிறிஸ்துவைச் சார்ந்து ஜெபத்தோடு முன்னேறுவோம். நம்முடைய தேவன் இன்னும் பெரிய செயல்களைச் செய்ய வல்லவர்.

நம்முடைய திருச்சபையில் நடைபெறும் ஆராதனைகளில் அதிகமானோர் பங்கேற்று ஆவிக்குரிய பலன்களைப் பெற நாம் ஜெபிப்போம். மேலும், ஆலயத்திற்கு வர இயலாதவர்களையும், நமக்குத் தெரிந்தவர்களையும் அன்போடு அழைத்து வர முயற்சி செய்வோம். ஆலய ஆராதனைகளில் அர்ப்பணிப்புடன் பங்கேற்போம். ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்வில் நம்மை வெற்றிக்கு நேராய் வழி நடத்தும் ஆண்டவர் இந்த புதிய மாதத்தில் நிறைவான ஆசீர்வாதங்களை தந்து நம்மை வழி நடத்துவாராக.

இறைவனின் கிருபையும் சமாதானமும் என்றும் உங்கள் அனைவருடனும் நிலைத்திருக்கட்டும்!

ஜெபங்களுடன்,<br>
கிறிஸ்துவின் திருப்பணியில்<br>
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**<br>
சபை ஆயர் மற்றும் குடும்பம்.

# அருளுரைப்பகுதி

## வெற்றி தரும் ஆண்டவர் (யாத்திராகமம் 17:8-16)

**தியான வசனம் : யாத்திராகமம் 17:15**
**"மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு"**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,
நம்முடைய வாழ்வில் ஒவ்வொரு நாளும் நம்மோடு இருந்து நம்மை வெற்றிக்கு நேராக வழி நடத்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

இந்த உலக வாழ்க்கை என்பது எப்போதும் நமக்கு பிரச்சனைகளும் போராட்டங்களும் நிறைந்த அனுபவமாய் இருக்கிறது. சிலர் வறுமையோடு போராடுகிறார்கள். சிலர் நோயோடு போராடுகிறார்கள். சிலர் குடும்ப பிரச்சனைகள், வேலையின்மை, கடன் சுமை, மனஅழுத்தம், ஆன்மீக பலவீனம் ஆகியவற்றோடு போராடுகிறார்கள். பல நேரங்களில் நாம் கேட்கும் கேள்வி "இந்த போராட்டத்தில் நான் வெற்றி பெறுவேனா?" என்பதுதான். அதற்கு திருமறை சொல்லும் பதில், நம்முடைய வாழ்வின் போராட்டங்களில் வெற்றியைத் தருவது நமது திறமையோ நாம் எடுக்கும் முடிவுகளோ அல்ல, ஆண்டவருடைய வழிநடத்துதலே நாம் நம்முடைய வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகளை மேற்கொள்ளவும் அதில் வெற்றி பெறவும் செய்கின்றது. ஆகவேதான் இந்த திருமறைப் பகுதியில்தான் மோசே ஒரு பலிபீடம் கட்டி அதற்கு "யெகோவா நிசி" "கர்த்தர் என் கொடி" "கர்த்தர் என் வெற்றி" என்று பெயரிட்டார். யாத்திராகமம் 17ஆம் அதிகாரம் ஒரு சாதாரண யுத்தக் கதை அல்ல. இது தேவனுடைய ஜனங்கள் எவ்வாறு தேவனை சார்ந்து தன்னுடைய வாழ்வில் வெற்றி பெறுகிறார்கள் என்பதை கற்றுத்தரும் முக்கியமான பகுதியாக இருக்கின்றது இந்த திருமறை பகுதி கற்றுத்தரும் சில ஆன்மீக உண்மைகளை அறிய முயற்சி செய்வோம்.

### 1. நம்முடைய நிலைமை அறிந்து வெற்றி தரும் கடவுள்

நம்முடைய ஆண்டவர் நம்முடைய பலவீனங்களை அறிந்து உதவி செய்கின்ற ஆண்டவராய் இருக்கின்றார். ஆகவேதான் சங்கீதக்காரன்

சங்கீதம் 40:17-ல் கூறுகின்றார், சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார், தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர், என் தேவனே, தாமதியாதேயும். இந்த இறைவார்த்தை நமக்கு உணர்த்தும் ஆறுதல் என்னவென்றால், உலகத்தின் பார்வையில் நாம் எந்த அளவுக்குச் சிறுமையாகக் காணப்பட்டாலும், சர்வவல்லமையுள்ள நான் கர்த்தர் நம்மை ஒருபோதும் மறப்பதில்லை, எப்போதும் நம் மீது நினைவாக இருக்கிறார் என்கிறார். இஸ்ரவேல் மக்களுடைய வாழ்வில் பார்ப்போம் என்றால் அவர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வனாந்தரத்தில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் இன்னும் பலவீனமான மக்களாய் இருந்தனர். அவர்களுக்கு போர் அனுபவம் இல்லை. ஆயுத வலிமை இல்லாதவர்களா இருந்தனர். மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட இராணுவம் இல்லை. ஆனால் அவர்களுக்கு ஒரு பெரிய பலம் இருந்தது: அவர்களோடு கடவுள் இருந்தார்.

ரெபிதீம் என்ற இடத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. மக்கள் குறைசொன்னார்கள். தேவன் கன்மலையிலிருந்து தண்ணீர் கொடுத்தார். அதற்குப் பிறகு உடனே ஒரு புதிய பிரச்சனை வந்தது. அமலேக்கியரின் தாக்குதல் இவர்களுக்கு வருகின்றது. பிரச்சனைகளுக்கு மேல் பிரச்சினைகளை சந்தித்து பலவீன நிலையில் இருந்த மக்களுக்கு ஆண்டவர் உதவி செய்வதை நாம் இந்த திருமறைப் பகுதியில் அறியலாம். சில நேரங்களில் நம்முடைய வாழ்வில் ஒரு பிரச்சனை முடிவதற்குள் இன்னொரு பிரச்சனை ஆரம்பிக்கும். அதுபோல்தான் இங்கு தண்ணீர் பிரச்சனை முடிந்ததும் யுத்தம் ஆரம்பித்தது. இந்தாலும் இந்த நேரத்தில் நமது ஆண்டவர் அவர்களை கைவிடாமல் மக்களுடைய நிலைமை அறிந்து அறிந்து அவர் வெற்றி அருளுகின்றவராக இந்த திருமறைப் பகுதியில் தன்னை வெளிப்படுத்துகின்றார் தேவ மனிதர் Charles Spurgeon கூறுகிறார் “விசுவாசியின் வாழ்க்கையில் ஒரு போராட்டம் முடிந்தவுடன் மற்றொரு போராட்டம் தொடங்கலாம், ஆனால் ஒவ்வொரு போராட்டத்திலும் தேவன் முன்னதாகவே இருக்கிறார்” என்கிறார். நம்முடைய நிலைமையறிந்து நமக்கு உதவி செய்து நம்முடைய வாழ்விலே வெற்றி தரும் ஆண்டவர் நமது ஆண்டவராக இருக்கின்றார்.

**2. ஜெபத்தின் மூலம் வெற்றி அருளும் ஆண்டவர்**

ஜெபம் மூலம் மனிதர்களின் பலவீனங்களைப் பலமாகவும், தோல்விகளை வெற்றியாகவும் மாற்றுபவர் நம்முடைய ஆண்டவர் நாம் கடவுள் மீது வைக்கும் உறுதியான விசுவாசம் மற்றும் ஒருமனப்பட்ட ஜெபம் ஆகியவை, வாழ்க்கையின் எல்லாப் போராட்டங்களிலும் நமக்கு மாபெரும் வெற்றியைப் பெற்றுத்தரும். ஏனென்றால் ஜெபம் என்பது நம்முடைய வாழ்வில் நமக்கு வெற்றியை பெற்றுக்கொள்ளும் இரகசிய சாவியாக இருக்கின்றது. இந்த திருமறைப் பகுதியில் பார்ப்போமென்றால் மோசே தேவனுடைய கோலைக் கையில் எடுத்துக்கொண்டு மலையின் மேல் நின்றார். இது ஒரு சாதாரண கோல் அல்ல. அதே கோலால் செங்கடலை மோசே பிளந்தார் இந்தக் கோலினால் நைல் நதி இரத்தமானது இன்னும் பல அற்புதங்கள் நடந்தன இப்போது இந்த கோல் தேவனுடைய அதிகாரத்தின் அடையாளமாக இருக்கிறது. போர்க்களம் கீழே இருந்தது. ஆனால் வெற்றியின் தீர்மானம் மலையின் மேல் நடந்தது. இதுவே ஆன்மீக உண்மை. பல வெற்றிகள் வெளிப்புற சூழ்நிலையில் அல்ல, மறைவான ஜெப வாழ்க்கையில் தீர்மானிக்கப்படுகின்றன.

யாத்திராகமம் 17:11 வசனத்தில் நாம் படிப்போம் என்றால் “மோசே தன் கையை உயர்த்தும்போது இஸ்ரவேல் மேற்கொண்டது, அவன் கையைத் தாழவிடும்போது அமலேக் மேற்கொண்டது.” இது ஜெபத்தின் முக்கியத்துவப்படுத்துகின்றது. மோசேயின் கைகள் உயர்ந்தபோது வெற்றி. கைகள் சோர்ந்தபோது தோல்வி. இங்கே தேவன் சொல்லும் செய்தி போராட்டத்தின் நடுவில் ஜெபத்தை விடாமல் நம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டு ஜெபிக்க வேண்டும். அப்போது நமக்கு வெற்றி என்பது தருவார். பல நேரங்களில் மக்கள் யுத்தத்தைப் பார்க்கிறார்கள், ஆனால் ஜெபத்தை மறக்கிறார்கள். அதனால் தான் நமக்கு தோல்வி ஏற்படுகிறது. யுனெசநற ஆரசசயல கூறுகிறார் “தேவனுடைய வேலை ஜெபத்தின் மூலம் வெல்லப்படுகிறது.” ஆகவே நம்முடைய வாழ்விலும் நம்முடைய போராட்டங்களில் நாம் ஜெபிப்போம் ஜெயத்தை ஆண்டவர் நமக்கு தருகின்றவராய் இருக்கின்றார். இன்று பலர் திறமை அதிகம் கொண்டிருக்கிறார்கள். திட்டங்கள் இருக்கிறது. அறிவு இருக்கிறது. அனுபவம் இருக்கிறது.

ஆனால் தேவனை சார்ந்த ஜெப வாழ்க்கை இல்லையென்றால் உள்ளார்ந்த வெற்றி இருக்காது. குடும்பங்களில் திட்டம் இருக்கலாம், ஜெபம் இல்லாமல் சமாதானம் குறையலாம்.

ஊழியங்களில் செயல்பாடு இருக்கலாம், தேவ அபிஷேகம் குறையலாம். தனிப்பட்ட வாழ்வில் உழைப்பு இருக்கலாம், ஆன்மீக வெற்றி இல்லாமல் போகலாம். இந்தப் பகுதி மூலம் நான் கற்றுக் கொள்வது வெற்றி திறமையிலிருந்து மட்டும் வராது. வெற்றி தேவனை சார்ந்த வாழ்க்கையிலிருந்து வருகிறது.

**3. ஆண்டவர் ஒற்றுமையின் மூலம் வெற்றி தருகிறார்**

இன்றைய உலகம் தனிமனித வெற்றியைப் பெரிதுபடுத்துகிறது. "நான் செய்தேன்", "என் திறமை", "என் சாதனை" என்று மனிதன் பேசுகிறான். ஆனால் திருமறை ஒரு வேறு உண்மையை கற்றுக்கொடுக்கிறது: இறைவன் கொடுக்கும் பெரிய வெற்றிகள் பெரும்பாலும் ஒற்றுமையின் விளைவாக இருக்கின்றது. அமாலேக்கியருக்கு எதிரான போரில் வெற்றி பெற்றது ஒரே மனிதனால் அல்ல. பலருடைய பங்களிப்பு இருந்தது. யோசுவா போரிட்டான், மோசே ஜெபித்தான், ஆரோன் மற்றும் ஊர் மோசேயைத் தாங்கினார்கள். இந்த நிகழ்வு சொல்லும் செய்தி "வெற்றி தனிமனிதருக்கு அல்ல, கூட்டிணைவுக்கே." ஒற்றுமை இருக்கும் இடத்தில் இறைவனின் திட்டம் நிறைவேறும் யாத்திராகமம் 17:9ல் மோசே யோசுவாவிடம் சொல்கிறார்: "சிலரைத் தேர்ந்தெடுத்து அமலேக்கியரோடு போரிடு." இங்கே ஒவ்வொருவருக்கும் தனித்தனி பணி இருக்கிறது. யோசுவாவுக்கு போர்க்களத்தில் வேலை இருந்தது. மோசே மலைமேல் ஜெபத்தில் இருக்க வேண்டி இருந்தது ஆரோன், ஊர் ஆதரவுப் பணியை செய்தனர். யாரும் மற்றவரின் வேலையை செய்யவில்லை. ஆனால் அனைவரும் ஒரே இலக்கிற்காக செயல்பட்டார்கள். இதுவே இறைவனின் ஒழுங்கு. இறைவனுடைய பணியில் எல்லோரும் ஒரே வேலையைச் செய்ய வேண்டியதில்லை. ஆனால் அனைவரும் ஒரே நோக்கத்திற்காக செயல்பட வேண்டும். சபையிலும் இதே உண்மை. ஒருவர் பிரசங்கிக்கலாம். ஒருவர் ஜெபிக்கலாம். ஒருவர் இசை ஊழியம் செய்யலாம். ஒருவர் அமைதியாக சேவை செய்யலாம்.

எல்லா பணிகளும் தேவையானவை. கண்ணால் கையை இகழ முடியாது. ஒரு மனிதன் வெற்றி பெறுவது தனியாக அல்ல. ஒற்றுமையுடன் இணைந்த செயல்பாட்டை அவனுக்கு வெற்றியை கொண்டு வருகின்றது Dietrich Bonhoeffer என்பவர் கூறும்போது "கிறிஸ்தவ வாழ்க்கை தனிமையில் வாழப்படுவதில்லை, அது ஒருவரை ஒருவர் தாங்கும் சமூகமாகும்." என்கின்றார். நம்ம ஒவ்வொரு நாளும் வெற்றியின் பாதையில் வழிநடத்தும் ஆண்டவரே நம்பி பயணிப்போம் இறையாசி பெறுவோம்.

கிறிஸ்துவின் திருப்பணியில்
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
சபை ஆயர்

# செயலர் மடல்

*“ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினம் எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றக்கடவன்.” (லூக்கா 9:23)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே சபைகுழுவின் சார்பில் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திருச்சபையின் வாயிலாக நம்மையும் நம் குடும்பங்களையும் பாதுகாத்து ஆசீர்வாதமாய் வழிநடத்தி வருகிற நம் தேவாதி தேவனுக்கு துதி தோத்திரங்களை செலுத்துவதோடு, திருச்சபையின் வாழ்வுக்காக உதாரத்துவமான பங்களிப்புகளைத் தந்து, ஊழியங்களில் உற்சாகமாய் பங்கேற்று வருகிறதான விசுவாசிகள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்த்தருடைய சித்தத்தின் படி, 03-05-2026 அன்று நமது திருச்சபையின் பரிசுத்த திருவிருந்து தொழுகையை தொடர்ந்து, பேராயரின் அறிவுறுத்தலின்படி முன்னர் அறிவித்தது போல், வருகின்ற மூன்று ஆண்டுக்கான மூப்பர்கள் தேர்வுக்கான பொதுகுழு கூடுகை, நமது ஆயர் Rev. J. Deva Raja Jebastin அவர்களது தலைமையில் நடைபெற்றது. அதில் தற்போதைய சபைகுழு உறுப்பினர்களுடன் சேர்ந்து சபை வளர்ச்சிக்காக பணிபுரிய Mr.Binu kumau N மற்றும் Mrs. T. Pradeepa Rajesh ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்களை வாழ்த்துகிறேன்.

10-05-2026 அன்று திருச்சபையின் ஆராதனையை உழைப்பாளர் மற்றும் மருத்துவர்தின ஆராதனையாக நடத்த கர்த்தர் கிருபை புரிந்தார். ஆராதனையை நடத்திய அனைவரையும் வெகுவாய் பாராட்டி நன்றி கூறிக்கொள்கிறேன்.

இயேசுகிறிஸ்து பூமியில் மனிதர்களோடு வாழ்ந்த காலத்தில் தம்மைப் பின்தொடர்ந்து வரவிரும்பிய ஏராளமான மக்களை அப்படியே ஏற்றுக்கொண்டு விடவில்லை, ஏனென்றால் தம்மை யார் பின்பற்றமுடியும், எப்படி பின்பற்றவேண்டும், அந்த பாதையின் பின் விளைவுகள் என்ன என்பது போன்ற விஷயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். அதேபோல நமது திருச்சபையின் ஊழியங்களையும் ஆயரோடு இணைந்து முன்நின்று நடத்தி வருகின்ற அனைத்து சபைகுழு அங்கத்தினர்கள், புதிதாக சேர்ந்துள்ள அங்கத்தினர்கள், ஜுனியர் சர்ச் இயக்குனர், ஆசிரியர்கள், பெண்கள் சங்க செயலர், பாடகர்குழு ஆசிரியர், ஆடிட்டர், வார்டன் யாவரையும் மனதார பாராட்டுகிறேன். தொடர்ந்து நமது திருச்சபையின் மூலம் இறை நாமம் மகிமைப்படவும், அவரது அன்பு அநேகருக்கு சென்றடைய கர்த்தர் நம்மை பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள். அத்தோடு திருச்சபையின் ஊழியங்களில் பலநிலைகளில் உதவிவருகிறதான விசுவாசிகள் யாவரையும் வாழ்த்துகிறேன். வருகின்ற நாட்களிலும் திருச்சபையின் அங்கத்தினர்களாகிய நாம் அனைவரும் அன்போடு இணைந்து, ஜெபத்தோடு நமது திருச்சபையின் வளர்ச்சிக்காய் முழுமையான பங்களிப்பை தர பணிவாய் வேண்டுகிறேன்.

எல்லா கால சூழ்நிலைகளையும் அறிந்து, தமது ஜனங்களை காத்து வழிநடத்துகிற நமது தேவன்தாமே, தற்போதைய சூழ்நிலைகளிலும் நாம் ஆசீர்வாதத்தை பெற்று வாழ்வதற்கேற்ற கிருபைகளைத் தந்து வழிநடத்தவும், நம் திருச்சபையை தொடர்ந்து ஆசீர்வாதமாய் நடத்தவும் ஜெபிப்போம்.

காத்தர் தாமே, நம் அனைவரையும் ஆசீர்வாதமாக நடத்துவாராக ஆமென்.

சபைக்குழு சார்பில்,

**K. அருண்குமார் - செயலாளர்.**

# ஆண்கள் பகுதி

## “சோதனைகளிலும் நிலைத்த யோசேப்பு - ஆண்களின் முன்மாதிரி”

(ஆதியாகமம் 37–50)

**1. கனவுள்ள மனிதன் - Vision கொண்ட ஆண் (ஆதியாகமம் 37:5)**
“யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டான்.” திருமறையில் “கனவு” என்பது வெறும் இரவுக் காட்சி அல்ல. அது பல நேரங்களில் தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடு ஆகும். யோசேப்பு சிறுவனாக இருந்தபோது தேவன் அவனுடைய எதிர்காலத்தைப் பற்றிய தரிசனத்தை கொடுத்தார். ஆனால் ஒரு முக்கியமான உண்மையை பார்க்க வேண்டும் தேவன் கனவை கொடுத்த உடனே வெற்றி கொடுக்கவில்லை. அவன் கனவு கண்ட பிறகு தான் அவனுடைய வாழ்விலே சோதனைகள் ஆரம்பிக்கின்றது பலவிதமான சோதனையை யோசேப்பு எதிர்கொண்டார். வெறுப்பு, அவமதிப்பு, குழி, அடிமைத்தனம், சிறை ஆகியவற்றை எதிர் கொண்டார். இது தான் வாழ்க்கையின் எதார்த்தம். இதை அறிந்த யோசேப்பு தான் கண்ட கனவின் மீது நம்பிக்கை கொண்டு, ஆண்டவரை முழுமையாய் நம்பி வாழ்ந்தார். சகோதரர்கள் வெறுத்தார்கள். ஆதியாகமம் 37:24 அவரை குழிக்குள் போட்டார்கள். சிந்தித்துப் பாருங்கள், ஒரு இளைஞன் தன் தன் சொந்த சகோதரர்களால் துரோகம் பண்ணப்படுகின்றான். அவன் மனம் உடைய வேண்டிய சூழ்நிலை. ஆனால் யோசேப்பு முற்றிலும் அழியவில்லை. ஏன்? தேவன் கொடுத்த நோக்கம் அவன் உள்ளத்தில் இருந்தது. இறையியலாளர் Rick Warren கூறுகின்றார்.

'Purpose gives meaning to pain.' “நோக்கம் இருந்தால் வேதனைக்கும் அர்த்தம் கிடைக்கும்.” யோசேப்பின் வேதனை அர்த்தமற்றதாக இல்லை. தேவன் ஒரு தேசத்தை காப்பாற்ற அவரை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார் என்பதில் யோசேப்பு முழுமையாய் ஆண்டவரை சார்ந்திருந்தார் என்று நாம் அறிகின்றோம். அன்புக்குரிய சகோதரர்களே, உங்கள் வாழ்க்கை இன்று பல குழியில் இருக்கலாம், வேலைப் பிரச்சனை, குடும்பப் போராட்டம், மனஅழுத்தம், பொருளாதார சுமை ஆனால் நினைவில் கொள்ளுங்கள். தேவன் உங்களுடைய கனவை மறக்கவில்லை, மனிதர்கள் உங்களை நிராகரிக்கலாம். ஆனால் தேவன் உங்களை கைவிடவில்லை. நோக்கமுள்ள ஆண் சோதனையில் திசை இழக்கமாட்டான்.

**2. பரிசுத்தத்தை காத்த யோசேப்பு - சோதனையில் விழாத ஆண்**

**(ஆதியாகமம் 39:7–12)** சோதனை யோசேப்பின் வாழ்க்கையில் வந்தது ஆதியாகமம் 39:7 “உன் உடன் சயனிக்க வேண்டும் என்று அவள் சொன்னாள்.”

போத்திபாரின் மனைவி யோசேப்பை தினந்தோறும் சோதித்தாள். இது ஒரு சாதாரண சோதனை அல்ல. இது தன் வாழ்வையே அசைக்க கூடிய சோதனை

- இரகசிய சோதனை
- இச்சையின் சோதனை
- அதிகாரத்தின் சோதனை
- ஒழுக்கத்தின் சோதனை

இன்று பல ஆண்கள் இதே இடத்தில் போராடுகிறார்கள்.

- இணைய சோதனைகள்
- மறைமுக பாவங்கள்
- தவறான உறவுகள்
- கண்களின் ஆசை
- மனத்தின் அசுத்தம்

பலர் வெளியே பரிசுத்தமாகத் தோன்றுகிறார்கள், ஆனால் உள்ளே போராடுகிறார்கள். இதில் யோசேப்பு “இல்லை” என்று சொல்லத் தெரிந்தவராக இருந்தார் ஆதியாகமம் 39:8 “அவன் மறுத்து…” இது மிகப் பெரிய வார்த்தை. “அவன் மறுத்து.” ஒரு உண்மையான ஆண் எல்லாவற்றுக்கும் “ஆம்” என்று சொல்ல மாட்டான். தேவனுக்கு விரோதமானவற்றுக்கு “இல்லை” என்று சொல்லத் தெரியும். இன்றைய சமூகம் சொல்கிறது: “பாவம் சாதாரணம்.” “யாருக்கும் தெரியாது.” “வாழ்க்கையை அனுபவி.” ஆனால் யோசேப்பு வேறுபட்டான். யோசேப்பின் பயம் மனிதனைப் பற்றிய பயமல்ல, தேவபயம் ஆதியாகமம் 39:9 “நான் இந்த மகா பொல்லாப்பைச் செய்து தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வது எப்படி?” கவனியுங்கள். அவன் சொல்லவில்லை: “போத்திபாருக்குப் பயப்படுகிறேன்.” அவன் சொன்னது: “தேவனுக்கு விரோதமாக நான் எப்படி பாவம் செய்வேன்?” இதுதான் தேவபயம். மக்கள் பார்க்காத நேரத்திலும் நேர்மையாக இருப்பதாகும்.

இறையியலாளர் Billy Graham கூறுகின்றார்.
'Integrity is doing the right thing even when no one is watching." “யாரும் பார்க்காதபோதும் சரியானதைச் செய்வதே நேர்மை.” யோசேப்பின் அறையில் யாரும் இருக்கவில்லை. ஆனால் தேவன் இருந்தார். அது அவனுக்கு இந்த சோதனை மேற்கொள்ள போதுமானதாக இருந்தது.

**3. உயர்ந்த இடத்திலும் பொறுப்புடன் செயல்பட்ட யோசேப்பு**
யோசேப்பு வெறும் பதவியை அனுபவிக்கவில்லை. மாறாக தான் பெற்ற உயர்வை சிறப்பாக செய்ய வேண்டும் என்று எண்ணி வாழ்ந்ததை நாம் காணலாம். அதற்காக அவன் திட்டமிட்டான், அவன் சேமித்தான், அவன் நிர்வகித்தான். அதன் மூலம் அவன் தேசத்தைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றினான். இதுவே பொறுப்புள்ள ஆண்மையின் அடையாளம்.

ஒரு உண்மையான ஆண்:

- திட்டமிடுவான்
- பொறுப்பேற்பான்
- எதிர்காலத்தை நினைப்பான்
- குடும்பத்தையும் சமுதாயத்தையும் பாதுகாப்பான்

அன்புக்குரியவர்களே தேவன் உங்களுக்கு பல பொறுப்புகள் சமுதாயத்தில் திருச்சபையில் கொடுத்திருக்கலாம். அதை நாம் பொறுப்போடு நிறைவேற்ற அழைக்கப்படுகின்றோம்.

இறையியலாளர் John Maxwell கூறும்போது 'A leader is one who knows the way, goes the way, and shows the way." “ஒரு தலைவர் வழியை அறிந்திருப்பார், அந்த வழியில் நடப்பார், பிறருக்கும் வழிகாட்டுவார்.” யோசேப்பு தான் கொண்ட பொறுப்புக்கு முன்மாதிரியாய் வாழ்ந்தார்.

**4. மன்னிக்கத் தெரிந்த யோசேப்பு (ஆதியாகமம் 45:1–15)**
யோசேப்பின் வாழ்க்கையில் மிக ஆழமான ஆன்மீக உயரம் காணப்படும் பகுதி இதுதான். அதிகாரம் வந்தது பெரிய விஷயம். ஆனால் மன்னிப்பு அதைவிட பெரிய விஷயம். துரோகம் செய்த சகோதரர்கள் மீண்டும்

முன்னால் வந்தனர். யோசேப்பை சிறைக்குள் தள்ளியவர்கள் அவனுடைய சொந்த சகோதரர்கள். அவர்கள் பொறாமையால் நிரம்பியவர்கள். அவனை விற்க நினைத்தவர்கள். இப்போது அவர்கள் உணவுக்காக எகிப்துக்கு வருகிறார்கள். அவர்கள் யோசேப்பை அறியவில்லை. ஆனால் யோசேப்பு அவர்களை அறிந்தான். பழிவாங்கும் வாய்ப்பு இருந்தும் மன்னிப்பை தேர்ந்தெடுத்தான். யோசேப்புக்கு எல்லா அதிகாரமும் இருந்தது. அவர்களை கைது செய்யலாம் அல்லது சிறையில் போடலாம் அவர்களை தண்டிக்கலாம். ஆனால் அவன் சொன்னான், ஆதியாகமம் 45:5 “நீங்கள் என்னை விற்றதற்கு வருத்தப்படாதீர்கள்... தேவனே என்னை அனுப்பினார்.” இங்கு அவன் அனுபவித்த காயங்களை நினைவில் வைத்துக்கொள்கிறான். ஆனால் பழிவாங்க அனுமதிக்கவில்லை.

ஆதியாகமம் 50:20 “நீங்கள் எனக்கு தீமை செய்தீர்கள், ஆனால் தேவன் அதை நன்மையாக மாற்றினார்.” இதுதான் யோசேப்பின் ஆன்மீக பார்வை. மனிதர்கள் திட்டம் வைத்தார்கள் அழிக்க. தேவன் திட்டம் வைத்தார் அவர்களை காப்பாற்ற. இறையியலாளர் Corrie ten Boom கூறுகின்றார் 'Forgiveness is the key that unlocks the door of resentment." “மன்னிப்பு என்பது வெறுப்பின் கதவைத் திறக்கும் சாவி.” யோசேப்பு அந்த சாவியை பயன்படுத்தினான்.

அன்புக்குரியவர்களே, நம்முடைய வாழ்க்கையில் யாராவது நம்மை காயப்படுத்தியிருக்கலாம், துரோகம் செய்திருக்கலாம், மதிப்பை இழக்கச் செய்திருக்கலாம். அவர்களை எல்லாம் நாம் மன்னிப்பு நம்முடைய வாழ்வில் முன்னேற அழைக்கப்படுகின்றோம். Billy Graham இந்த தேவ மனிதர் குறுந்த போது 'God has forgiven us@ we must forgive others." “தேவன் நம்மை மன்னித்துள்ளார், நாமும் பிறரை மன்னிக்க வேண்டும்.” என்கிறார் உண்மையான ஆண்மையின் அடையாளம் அதிகாரம் அல்ல, மன்னிப்பு என்பதாகும்.

**Mr. J.D.R.Alwin**

# பெண்கள் பகுதி

## ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும்

எனக்கன்பான சகோதரியே! திருமணம் என்னும் பந்தத்தில் கணவன் மனைவியாக இணைக்கப்படுவது தேவனுடைய உன்னதமான திட்டம். ஜாடிக்கேத்த மூடியாக இருக்கிறார்கள் என்று ஒருமித்து வாழ்பவர்களைக் குறித்து பெரியவர்கள் சொல்வார்கள். இப்படியாக வாழ்ந்த புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட ஒரு தம்பதி தான் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் (Aquila-Priscilla).

வேதாகமத்தில் இவர்களுடைய பெயர் 6 முறை சொல்லப்பட்டிருக்கிறது (அப். 18:2, அப்.18:18, அப்.18:26, ரோமர் 16:3, 1கொரி.16:19, 2தீமோ. 4:19). எல்லா சமயத்திலும் இணைத்தே சொல்லப்பட்டிருக்கிற இவர்களைக் குறித்து பிரித்து எழுத எனக்கு மனமில்லை.

ஆக்கில்லா என்ற பெயருக்கு கழுகு என்று அர்த்தம். பிரிஸ்கில்லா என்ற வார்த்தைக்கு சற்று பழமையானது என்று பொருள். கழுகினுடைய தன்மை வேகமானது, கூர்மையான பார்வையுடையது என்று நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட கணவனுக்கு சற்று பழமையானவர், வேகம் குறைந்தவர் என்று அர்த்தமுள்ளவள் மனைவியானாள். இருவரும் இரு பெயரளவில் வெவ்வேறு குணங்களை உடையவர்களாக இருந்தாலும் அவர்களுடைய சிந்தையிலே, செயலிலே ஒருமனம் இருந்தது. இவர்களை மேன்மையாகப் பேசப்படுகிறதற்குக் காரணமான நற்கிரியைகளைக் குறித்துப் சிந்திப்போம்.

**1. இழப்பின் மத்தியில் நம்பிக்கை:**

இந்த ஆக்கில்லா பிரிஸ்கில்லாவிடமிருந்து நாம் முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டியது ஒருமனம், ஒரே சிந்தை. இவர்கள் எந்தெந்த காரியங்களில் ஒருமனப்பட்டிருந்தார்கள் தெரியுமா?

ஆக்கில்லா யூத குடும்பத்தைச் சேர்ந்தவர். பொந்து தேசத்தான் என்று அழைக்கப்படுகிறார். பிரிஸ்கில்லா ரோம நகரத்தைப் பூர்வீகமாகக் கொண்டபடியினால் ரோமாபுரியிலுள்ள இத்தாலியில் இவர்கள் வசித்து வந்தார்கள். அப்போது ரோமானிய நாட்டை ஆளுகை செய்த ரோமப் பேரரசன் கிலவுதியுராயன் தன் நாட்டு மக்களை சீர் பொருந்தும்

வண்ணமாக மேலும் அங்கிருந்த யூதர்கள் ரோம மக்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றுகிறதைக் கேள்விப்பட்டு, அங்கே வசித்த ரோமானியர் அல்லாத மக்களை நாட்டை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார். அந்நாட்களில் சுமார் 20,000 யூதர்கள் ரோம் நகரை விட்டு வெளியேற்றப்பட்டனர். ஆக்கில்லா பிரிஸ்கில்லா குடும்பமும் இந்த கட்டளைப்படி இத்தாலி நாட்டை விட்டு கிரேக்க நாட்டிற்கு வந்து அந்த நாட்டில் மிக செழுமையான நகரமாக இருந்த கொரிந்து பட்டணத்தில் குடியேறினார்கள்.

இந்நாட்களில் அமெரிக்க நாட்டு பிரஜை (U.S.Citizen) என்று சொல்லிக் கொள்கிறதில் மக்கள் பெருமைக் கொள்வதைப் போல, அந்நாட்களில் ரோம குடிமக்களாக இருப்பதை பெருமையாக, மேன்மையாக எண்ணினர். பிரிஸ்கில்லா ரோமராக இருந்தபடியினால் அந்தப் பட்டணத்திலேயே இருப்பதாக இருந்தாலும் இருந்திருக்கலாம். ஆனால் ஆக்கில்லா யூதனாக இருந்ததால் தன் கணவரோடு இருப்பதுதான் தனக்கு மதிப்பு என்று எண்ணி ரோம தேசத்தை விட்டு கணவனும் மனைவியும் வெளியேறினார்கள். கடவுள் இணைத்த தங்களை மனிதனோ, நாடோ, மொழியோ, இனமோ, சட்டமோ, அந்தஸ்தோ பிரிக்க முடியாது என்பதற்கு உதாரணமாய் பிரிஸ்கில்லா தன் கணவனுடன் நாட்டை விட்டு வெளியேறினாள்.

தாங்கள் இருந்த நாட்டை விட்டுவிட்டு, ஆஸ்திகள் சம்பாத்தியத்தை எல்லாம் விட்டுவிட்டு சென்றார்கள். உலகத்தின் ஆஸ்திகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையைக் கட்டுவதைக் காட்டிலும் தேவனே ஒரு மனிதனுடைய வாழ்க்கையைக் கட்டுவார் என்று நம்பிக்கையோடு, தைரியத்தோடு சென்றார்கள். சகோதரியே! பிரிஸ்கில்லாவைப் போல கணவனுடன் இன்பத்தில் மாத்திரமல்ல துன்பத்திலும், கஷ்டத்திலும் பங்கெடுத்துக் கொள்கிறவர்களாக நாம் இருக்கின்றோமா? அப். பவுல் சொல்கிறதைப் போல கிறிஸ்துவுக்காக லாபமான அனைத்தையும் நஷ்டம் என்று கருதுகின்றோமா? அருமையானவர்களே! மத்தேயு 18:19 சொல்கிறது பூமியிலே ஒருமனப்பட்டு வேண்டிக் கொள்ளும் காரியம் பிதாவினால் அவர்களுக்கு உண்டாகும். இவ்வார்த்தையின்படி கணவர் மனைவியாக இவர்கள் ஒருமனப்பட்டிருந்தார்கள். ஒருமனம் குடும்பத்தில் இருக்கும்போது அங்கே தேவனுடைய ஆசீர்வாதம் தங்கும். மேலும் ஒருமனமே குடும்பத்தின் மகிழ்ச்சியாய், பெலனாயிருக்கிறது.

**2. உழைப்பிலே நம்பிக்கையாய் இருந்தனர் :**

உங்கள் சொந்த கைகளினாலே வேலை செய்ய வேண்டும் (1தெச 4:12) எனக்கு அன்பானவர்களே, ஒவ்வொரு மனிதனும் சோம்பலாய் இல்லாமல் உழைத்து பிழைக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகின்றார். நம்முடைய ஆதி பெற்றோராகிய ஆதாம் ஏவாளைப் படைத்த தேவன் அவர்கள் இருவரும் ஒரு வேலையும் செய்யாமல் ஏதேன் தோட்டத்தில் உலாவிக் கொண்டு, வேளாவேளைக்கு சாப்பிட்டுக் கொண்டு சந்தோஷமாக காலத்தை வீணடிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மாறாக ஆதி 2:15 சொல்கிறது, கர்த்தர் ஆதாமை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்து வந்து அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். ஆகவே நாம் எல்லாருமே உழைக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலையை தேவனுக்கு பயந்து உண்மையாய் செய்ய வேண்டும். அலுவலகத்திலோ, வீட்டிலோ, தான் செய்ய வேண்டிய வேலையை தனக்குக் கீழான நபர் மீது சுமத்துவது போன்ற காரியங்களைத் தவிர்த்து, தேவன் என்னைப் பார்க்கிறார் என்ற உணர்வோடு வேலையை உண்மையாய் செய்ய வேண்டும். வேதம் சொல்கிறது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள் (அப்போ. 18:3). இவர்கள் இருவரும் இழந்ததை எண்ணிக் கவலைப்படாமல், நடக்க வேண்டியவைகளை யோசித்தவர்களாக, கடின உழைப்பிற்கு என்றுமே பலன் உண்டென்று அறிந்தவர்களாக கடினமான உழைப்பாளிகளாய் இருந்தார்கள்.

**3. ஊழியத்தை மகிழ்ச்சியுடன் செய்தார்கள் :**

இவர்கள் அப். பவுலுடைய இரண்டாம் ஊழியப் பயணத்தின்போது அவரைச் சந்தித்தார்கள். அதுவரைக்கும் வேலை மாத்திரம் செய்துக் கொண்டிருந்த அவர்கள் பவுலோடு சேர்ந்து ஊழியமும் செய்தார்கள். அவர்கள் வீட்டில் ஒரு சபை நடந்து வந்தது என 1 கொரி 16:19-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்பு சகோதரிகளே! இன்று எத்தனை பேர் தேவன் நம்மைக் குறித்து, நம் குடும்பத்தைக் குறித்து, நாம் வசித்துக் கொண்டிருக்கிற வீட்டைக் குறித்து பெரிதான நோக்கங்களை வைத்திருக்கிறார் என்று அறிந்திருக்கிறோம்? ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் கணவனும் மனைவியுமாக

இணைந்திருப்பது எவ்வளவு முக்கியமோ அதேப் போல் குடும்பமாக இணைந்து கடவுளுக்கு சேவை செய்வதும் முக்கியம் என்று அறிந்திருந்தார்கள். ஆதலால்தான் பலர் கூடி தேவனை ஆராதிக்கவும், தேவனுடைய வார்த்தையைக் கேட்கவும், தேவனுடைய ஊழியத்தைச் செய்ய தங்கள் வீட்டை திறந்துக் கொடுத்தார்கள்.

இன்று நம்மில் எத்தனைப் பேர் நம்முடைய வீட்டை ஊழியத்திற்கு திறந்து கொடுக்கிறவர்களாக இருக்கின்றோம்? இது மாத்திரமல்ல ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் தேவ ஊழியர்களை உபசரிக்கிறதில் சளைத்தவர்கள் அல்ல. ஆம், அவ்வழியாக வருகிற தேவ ஊழியர்களை தங்கள் வீட்டிற்கு அழைத்து போஷித்து சேவை செய்ததாக அப். 18:3 சொல்கிறது. மேலும் அப். 18-ம் அதிகாரத்தை முழுவதும் படிப்பீர்களானால் இவர்கள் வேத வசனத்தை, சத்தியத்தை நன்கு அறிந்தவர்களாக இருந்தபடியினால் யோவான் ஸ்நானன் வழியாக வெளிப்பட்ட தேவத் திட்டத்தை மட்டும் அறிந்திருந்த, பழைய ஏற்பாட்டு சத்தியங்களை மட்டும் புரிந்திருந்த அப்பொல்லோ என்ற தேவ ஊழியருக்கு புதிய ஏற்பாட்டின் சத்தியத்தை, இயேசு கிறிஸ்துவின் பூரண வெளிப்பாட்டை தெளிவாக எடுத்துக் கூறி அவருடைய ஊழியத்தை சீர்ப்படுத்தி புதிதான விதத்தில் தேவனுடைய ஊழியத்தை சிறப்பாக செய்ய அப்பொல்லோ போன்ற பல ஊழியர்களை எழுப்பினார்கள். எனக்கன்பானவர்களே! இன்று நாம் எத்தனைப் பேரை ஆண்டவருக்காக வாழ எழுப்பியிருக்கின்றோம்? அல்லது சத்தியத்தை அறிந்தும் நாமே இன்னும் எழும்பாமல் இருக்கின்றோமா? நம்முடைய பதில் என்ன?

**4. ஊழியத்தில் சாட்சியாய் இருந்தார்கள் :**

மேலும் ஆக்கில்லா பிரிஸ்கில்லா குறித்த மிகப்பெரிய சாட்சி என்னவென்றால் இவர்கள் தேவனுடைய ஊழியரை காப்பாற்றும்படியாக உயிரையும் விட்டார்கள். அப். பவுல் இவர்களைக் குறித்து இவ்வண்ணமாக சொல்கிறார்.

கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள், அவர்கள் என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் (ரோ 16:3,4).

சரித்திரம் சொல்கிறது, அவர்கள் இருவரும் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாய் மரித்தார்களாம். அவர்கள் ஒரே நாளிலே, ஒரே இடத்திலே அடக்கம் பண்ணப்பட்டார்கள்.

எனக்கன்பான சகோதரிகளே! நாம் இப்போது கிருபையின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் இப்படிப்பட்ட காரியங்களை நாம் கேட்கின்றோம், பார்த்ததில்லை. ஆனால் கடைசிக் காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள், கிறிஸ்துவை மறுதலிக்க கட்டாயப்படுத்தப்படுகிற காரியங்கள் நடக்கும். அப்போது நாம் எப்படி இருப்போம்? நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஆக்கில்லா பிரிஸ்கில்லாள், நமக்கு சாட்சியாக இருக்கின்றார்கள்.

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, கிறிஸ்தவர்களாய் வாழ்கிறோம் என்று சொல்கிற நாம் மனசாட்சியின் படி, சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்வோம். மேலும் கிறிஸ்துவுக்காக எதையும் நான் தாங்குவேன், சகிப்பேன் என்று சொல்லுகிறது மாத்திரமல்ல, அதற்கென்று பிரயாசப்படுகின்ற ஊழியக்காரர்களை, ஊழியங்களை தாங்குகிறவர்களாக இருப்போமாக.

**திருமதி. P.ஜாண்சி**
**ஆயரம்மா.**

# திருக்குறள் வழி மறையறிவோம்

**திருக்குறள் 5**
**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

**1. "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்"**
தேவனின் பரிசுத்த தன்மை
இங்கு "இருள்" என்பது பாவம், அறியாமை, அநீதி ஆகியவற்றைக் குறிக்கிறது. "இருவினை" என்பது நன்மை தீமை என்ற மனித செயல்களின் இருமையைச் சொல்கிறது.
இந்த வரி சொல்லும் உண்மை: தேவன் எந்தப் பாவத்தாலும் பாதிக்கப்பட மாட்டார், அவர் முற்றிலும் பரிசுத்தர்.

திருமறை இதைத் தெளிவாகச் சொல்கிறது:

- "தேவன் ஒளி, அவரில் இருள் எதுவும் இல்லை." (1 யோ. 1:5)
- "உன் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், அவர் நீதியில் குறைவில்லாதவர்." (உபாகமம் 32:4)

மனிதன் நன்மையும் தீமையும் கலந்தவன். ஆனால் தேவன் அவற்றுக்கு அப்பாற்பட்டவர். அவர் நீதியின் அளவுகோல், மாற்றமில்லாத பரிசுத்தம்.

**2. "பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"**

தேவனை அறிந்தவர்களின் வாழ்வு

"பொருள்" என்றால் உண்மை சார்ந்த வாழ்வு, அர்த்தமுள்ள பக்தி, செயலில் வெளிப்படும் விசுவாசம்.

இந்த வரி கூறுவது: உண்மையான பக்தியில் வாழ்பவர்களின் வாழ்வில் தேவனுடைய புகழ் நிலைத்து நிற்கும்.

திருமறை இதை உறுதிப்படுத்துகிறது:

- "நீங்கள் ஒளியாய் பிரகாசிக்க வேண்டும், உங்கள் நல்ல செயல்களை மக்கள் கண்டு தேவனை மகிமைப்படுத்துவார்கள்." (மத்தேயு 5:16)
- "நல்ல கனிகளைத் தரும் மரமே நல்ல மரம்." (மத்தேயு 7:17) தேவனை உண்மையாக அறிந்தவர் வெறும் வார்த்தையால் அல்ல, வாழ்க்கையால் அவரை மகிமைப்படுத்துகிறார்.

**3. மனிதன் - இருளிலிருந்து வெளிச்சத்திற்கு அழைக்கப்படுகிறான்**

திருக்குறள் சிந்தனை மற்றும் திருமறை இரண்டும் ஒரே உண்மையைச் சொல்கின்றன: மனிதன் இருளில் இருக்கிறான், ஆனால் தேவன் அவனை ஒளிக்குள் அழைக்கிறார்.

- "இருளில் இருந்த மக்கள் மகா வெளிச்சத்தை கண்டார்கள்." (ஏசாயா 9:2)
- "நீங்கள் இருளிலிருந்து அவருடைய அதிசய ஒளிக்குள் அழைக்கப்பட்டவர்கள்." (1 பேதுரு 2:9)

தேவன் மனிதனை தள்ளுவதில்லை, மாற்றுகிறார்.

இருளை வென்ற ஒளி தேவனே. அவரை அறிந்த வாழ்க்கை தான் உண்மையான பொருள் நிறைந்த வாழ்க்க.

**Compiled by Mr. J.D.R Alwin**

# கன்னியாகுமரிப் பேராயத் தோற்ற நாள் - ஜுன் 2

1947-இல் தென்னிந்தியத் திருச்சபை உதயமானபோது அமைக்கப்பட்ட 14 பேராயங்களில் தென்திருவிதாங்கூர் ஒரு பேராயம். இதில் தமிழ் பேசும் மக்கள் வாழும் கன்னியாகுமரியும், மலையாளம் பேசும் மக்கள் வாழும் தென்கேரளா பகுதியும் அடங்கும். மொழி அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்ட போது, கன்னியாகுமரியில் வாழும் தமிழ் மக்களின் கோரிக்கை அடிப்படையில் கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலுகாக்கள் கேரளத்திலிருந்து பிரிக்கப்பட்டு தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. 1956 நவம்பர் 1-ஆம் நாள் மொழிவாரி மாவட்ட அமைப்பு, தென்னிந்தியத் திருச்சபை மக்களிடையே கன்னியாகுமரி தனிப் பேராயமாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. தென்திருவிதாங்கூர் பேராய மாமன்றம் இவ்விருப்பத்திற்கு இசைவு தெரிவித்தது. அதனடிப்படையில் 1958 செப்டம்பர் 16, 17 நாட்களில் நடைபெற்ற தென்னிந்தியத் திருச்சபை செயற்குழு கூட்டத்தில், தென்திருவிதாங்கூர் பேராயத்தை கன்னியாகுமரி, தென்கேரளா பேராயங்களாக பிரிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதின்படி 1959 ஜுன் 1-ஆம் நாள் கன்னியாகுமரி தனிப் பேராயமாக அமைக்கப்பட்டது. 1959 ஜுன் 2-ஆம் நாள் திருவனந்தபுரம் ஜுபிலி அரங்கில் நடைபெற்ற தென்திருவிதாங்கூர் பேராயத்தின் கடைசிக் கூட்டத்தில் பிரதமப் பேராயர் H. சுமித்ரா, புதிய இரண்டு பேராயங்களை (கன்னியாகுமரி, தென்கேரளா) பிரகடனம் செய்தார். கன்னியாகுமரிப் பேராயத்தின் பிரதமப் பேராயரின் பதிலாளராக (Moderator’s Commissary) பேராயர் A.H. லெக் நியமிக்கப்பட்டார்.

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தின் அனைத்து சி.எஸ்.ஐ. சபைகளும் கன்னியாகுமரிப் பேராயத்தின் கீழ் செயல்படுகின்றன. கன்னியாகுமரிப் பேராயத்தின் நோக்கம் “எல்லாரும் வாழ்வு பெறும்பொருட்டு” (That they may have life) யோவான் 10:10 கன்னியாகுமரிப் பகுதியில் முதலாவது சீர்திருத்த கிறிஸ்தவத்தை அறிமுகப்படுத்தியவர் மயிலாடி மகராசன் வேதமாணிக்கம் தேசிகர் ஆவர். ஆதிதிராவிடர் வகுப்பில் வள்ளுவன் என்னும் பிரிவினை சேர்ந்த இவர் மிகுந்த சமயப்பற்றுடையவர். இவர் தனது

அண்ணன் மகன் சிவகுருநாதனுடன் சிதம்பரத்தில் நடராஜரை வழிபடச் சென்றபோது “கிறிஸ்து அனுபவம்” பெற்றார். தஞ்சாவூரில் அருள்திரு. ஜாண் காஸ்பர் கோலாப் (J.K.Kohloff) போதகர் திருமறையின் அடிப்படைகளைக் கற்றுக் கொடுத்து, அவர்கள் விருப்பத்தின்படியே மகராசானுக்கு வேதமாணிக்கம் என்றும் சிவகுருநாதனுக்கு மாசில்லாமணி என்றும் பெயர்சூட்டி திருமுழுக்குக் கொடுத்தார். இறை அனுபவத்தோடும், இயேசு கிறிஸ்துவை பற்றிய அறிவோடும் இருவரும் மயிலாடி திரும்பினர்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அனுபவத்திலும், ஒரு அருட்பணியாளரை அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வேதமாணிக்கம் தஞ்சாவூர் சென்று கோலாப் போதகரிடம் முன்வைத்தார். அப்போது தரங்கம்பாடியில் தமிழ் கற்றுக்கொண்டிருந்த வில்லியம் தொபியாஸ் ரிங்கல்தௌபேயையும் நேரடியாக சந்தித்து மயிலாடி வரும்படி அழைத்தார். மயிலாடிக்குப் பயணமான ரிங்கல்தௌபே, வழியில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, வடக்கன்குளம் பகுதி கிறிஸ்தவர்களை சந்தித்துவிட்டு 25-04-1806 அன்று மாலை மயிலாடி வந்தடைந்தார். 27-04-1806 ஞாயிறு அன்று வேதமாணிக்கம் வீட்டில் கூடிவந்த மக்களுக்கு முதல் ஆராதனையை ரிங்கல்தௌபே நடத்தினார்.

ரிங்கல்தௌபே பத்து ஆண்டுகள் பணியை மயிலாடியிலும், சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் நிறைவேற்றிவிட்டு 1816 பெப்ரவரி முதலாம் நாள் மயிலாடியைவிட்டு புறப்பட்டுச் சென்றபோது ஏறத்தாழ 1000 கிறிஸ்தவர்களும், ஏழு சபைகளும், ஆறு பள்ளிக்கூடங்களும், ஆறு உபதேசிமார்களும், ஏழு பள்ளி ஆசிரியர்களும், ஒரு உள்ளூர் மருத்துவரும் மயிலாடி மிஷனில் இருந்தனர். இந்த சிறுமந்தை வளர்ந்து மூன்று பேராயங்களாகியுள்ளது (கன்னியாகுமரி, தென்கேரளா, கொல்லம் - கொட்டாரக்கரை). மூன்று பேராயங்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சபைகள், எட்டு லட்சத்திற்கும் அதிகமான அங்கத்தினர்கள், எண்ணிறந்த கல்வி, மருத்துவம், தொழில் நிறுவனங்கள் உள்ளன.

**Confirmation resources book by : ஞானமணி தேவ கடாட்சம்**

# உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 5

## இயற்கையை பாதுகாப்போம்

கடவுள் மனிதனை ஒரு மகத்தான
இயற்கை நிறைந்த பூமியில் படைத்தான்...
செயற்கையை விரும்பி இயற்கையை அழிக்கிறோம்
அழிவது இயற்கை மட்டுமல்ல
நம் வாழ்க்கையும் தான்...
நெகிழியைப் புதைத்து
மண்ணின் வளமையைக் குறைத்தோம்..
மரத்தை வெட்டி காற்றைக் கரைத்தோம்
காற்றை கூட காசுக்கு வாங்குவோம்...
நீர் இன்றி அமையாது உலகு ஆனால்
நீர் வீழ்ச்சிகளில் குப்பையைக் கொட்டி குட்டிசுவராக்கினோம்..
நிலத்தை அழித்தோம்! நீரைக் குறைத்தோம்!
காற்றை அடைத்து கண்ணீர் விடுகின்றோம்!
போதுமே இந்த போராட்டம்
இயற்கையைக் காத்து இன்பமாய் வாழ்வோம்!!
வருங்கால சந்ததிக்கு சேர்த்து வைப்போம்
நம் வாழ்வின் அழகிய இயற்கைச் செல்வங்களை..

**“வானங்கள் தேவனுடைய மகிமையை அறிவிக்கின்றன, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை வெளிப்படுத்துகிறது.” சங்கீதம் 19:1**

இயற்கை தேவனின் மகிமையை அறிவிக்கிறது.

**பவித்ரா.பா**

# ஜூன் 26 போதைப்பொருள் ஒழிப்பு தினம்

மனித சமூகத்தைச் சீர்கெடுப்பதில் போதைப்பொருள் உபயோகம் முதலிடம் வகிக்கிறது. போதைப்பொருள் பயன்பாடு மனித அறிவை மழுங்கச் செய்து, சிந்திக்கும் திறனை அழித்து குடும்பம், சமூகத்தை தவறான பாதையில் இழுத்துச் சென்றுவிடும்.

போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கு உலக நாடுகள் நடவடிக்கை எடுப்பது மற்றும் போதைப் பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது என்ற நோக்கத்துடன் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 26ஆம் தேதி **'பன்னாட்டு போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்டவிரோத கடத்தலை தடுக்கும் தினம்'** கடைபிடிக்கப்படுகிறது.

மனித சமூகத்தைச் சீர்கெடுப்பதில் போதைப்பொருள் உபயோகம் முதலிடம் வகிக்கிறது. போதைப்பொருள் பயன்பாடு மனித அறிவை மழுங்கச் செய்து, சிந்திக்கும் திறனை அழித்து குடும்பம், சமூகத்தை தவறான பாதையில் இழுத்துச் சென்றுவிடும் என்பதால், இந்நாளின் முக்கியத்துவம் நம் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

போதைப்பொருள் கடத்தல், விற்பனை இன்று மிகப்பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏறக்குறைய 30 கோடிக்கும் மேற்பட்டோர் போதைப் பொருள்களுக்கு அடிமையாக இருக்கின்றனர் என்று புள்ளி விவரம் தெரிவிக்கிறது. போதைப்பொருள் பயன்படுத்துபவர்களில் மூன்றில் ஒருவர் பெண் என்பது வேதனைக்குரிய அதிர்ச்சித் தகவல். போதைக்கு அடிமையாவோரில் 85 விழுக்காடு படித்தவர்கள், அதில் 75 விழுக்காடு இளையோர் ஆவர்.

மது, சிகரெட் ஆகியவை முதலில் கையிலெடுக்கப்பட்டு பிறகு அதையும் தாண்டி கஞ்சா, கொகைன், பிரவுன் சுகர், ஹெராயின், அபின், புகையிலை, ஒயிட்னர் போன்ற மனிதனை அழிக்கும் போதைப்பொருள்கள் இளைஞர்களின் வாழ்வைச் சீரழிக்கிறது. இவர்கள் மட்டுமின்றி இவர்களின் குடும்பங்கள், இவர்களால் பாதிப்புக்கு உள்ளாகும் அப்பாவிப் பெண்கள், குழந்தைகள் என்று பலருடைய வாழ்வும் சீரழிகின்றது. தனிமனித ஒழுக்கம் சீர்கெட்டு நாட்டின் முன்னேற்றப் பாதைக்கே போதை தடையாக இருக்கிறது.

இதில் படித்த இளைஞர்கள், செல்வந்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதனைக் கண்டும் காணாத அதிகாரிகளும் இருக்கின்றார்கள். இதனால் ஊழலும் லஞ்சமும் பெருகுகிறது. போதைப்பொருள்களைக் கடத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இதனால் போதைப்பொருள் பயன்படுத்துவோரின் குடும்பமும் பாதிக்கப்படுவதோடு பொருளாதார நெருக்கடியால் பரிதாபமான நிலையில் தற்கொலையும் நடந்து கொண்டிருக்கிறது.

**நாம் செய்ய வெண்டியது என்ன?**

அந்த காலத்தில் சிகரெட்டை மறைத்து குடித்து வந்தவர்கள் இன்று மதுவையும் வீட்டுக் கூடத்தில் வாரிசுகளுடன் சேர்ந்து அருந்தும் மேனாட்டு நாகரீகத்தில் வாழ்க்கையை இழந்து வருகின்றனர். திரைப்படங்களும், மாறிவிட்ட வாழ்க்கை முறைகளும், எளிதாக கிடைக்கும் போதைப் பொருள்களுமே இதற்கான காரணம். குடிப்பதும், கஞ்சா அடிப்பதும் ஹீரோயிசம் என்று காட்சிப்படுத்தும் திரைப்படங்களை எப்படித் திருத்தப் போகின்றோம்? சமூகப் பொறுப்பு அற்ற சிலரின் திரைக் காட்சிகள் காணும் சிறுவர் சிறுமிகள் எதுவும் தவறில்லை எனும் மனப்பான்மையில் தள்ளப்பட்டு மாணவப் பருவத்திலேயே போதைக்கு அடிமையாகி வருவது வேதனைக்குரிய விடயம்.

ஆதரவற்ற நிலை, போதிய அன்பு கிடைக்காமை, விரக்தி, அறியாமை, உளவியல் குறைபாடுகள், பொழுதுபோக்கு, தற்காலிக உற்சாகம் போன்ற நிவாரணங்கள் தேடியே பெரும்பாலோருக்கு போதை அறிமுகமாகிறது. இதுவே நாளடைவில் அவர்களை வீழ்த்தி மரணம் வரை கொண்டு விடுகிறது.

ஒருவர் போதைக்கு அடிமையானால் பாதிக்கப்படுவது அவர் மட்டுமல்ல, அவரது குடும்பமும்தான். முக்கியமாக அவர்களின் குழந்தைகளின் நிலை கேள்விக்குறியாகி அவர்களும் போதையின் வழியில் செல்லும் வாய்ப்புகள் அதிகம். போதைப் பொருள்களை அதிகம் பயன்படுத்துவதால் கொள்ளை, வன்முறை, கொலை, தற்கொலை போன்ற பல குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் உடல் நலக்குறைவு மற்றும் மனநல பாதிப்புகளும் அதிகமாகி குடும்பக் கட்டமைப்புகள் உடைந்து வருகின்றன.

தற்போது உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க வைக்கும் போதைக்கு ஆண்கள், பெண்கள், சிறியவர், பெரியவர் என்ற வித்தியாசமின்றி அடிமையாகி வருவது நிச்சயம் வேதனை தரும் ஒன்றாக உள்ளது. வீதிக்கு வீதி இருக்கும் டாஸ்மாக்குகள், பள்ளிகளின் வாசலிலேயே கிடைக்கும் கஞ்சா அபின் போன்றவை, காவல்துறையின் எச்சரிக்கையையும் கண்காணிப்பையும் மீறி உலாவரும் கடத்தல்காரர்கள் என போதையின் அரசாட்சி எங்கும் பரவிக் கிடக்கிறது. இதில் கவனமாக இருந்து, அதன் தீமைகள் குறித்த விழிப்புணர்வுடன் அன்பையும் தந்து பிள்ளைகளைப் போதையிலிருந்து பாதுகாக்கும் பெரும் பொறுப்பு பெற்றோர்களிடமே உள்ளது எனலாம்.

போதைப்பொருள் பயன்படுத்துவோருக்கு எதிராகப் பல சட்டங்கள் இருந்தாலும் இவற்றையெல்லாம் யாரும் மதிப்பதாக இல்லை. தலைக்கவசம் இல்லையென்றால் உயிருக்கு ஆபத்து என்பதை அறிவித்து அபராதம் விதிக்கும் காவல்துறையினரின் நடவடிக்கை, போதைப் பொருள்களாலும் உயிருக்கும் சமூகத்திற்கும் ஆபத்து என்பதைக் கண்டித்தும், தண்டித்தும் அவர்கள் பொறுப்பைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும். திரைப்படங்களில் போதைப்பொருள்களைப் பயன்படுத்தும் காட்சிகளுக்குத் தடை விதிக்க வேண்டும். மக்களுடைய நலன்களைக் கருதி போதைப்பொருள்கள் அனைத்தையும் முற்றிலுமாக ஒழிக்க அரசு முன் வரவேண்டும். அரசு நடத்தும் மதுக்கடைகளை மூட வேண்டும். போதைப் பொருள் பயன்படுத்தியதால் சீர் கெட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தேவையான வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தருவது அரசின் கடமையாகும்.

போதை பொருட்களை ஒழிப்போம் மனித மாண்பை காப்போம். போதையில் பாதை மாறாதிருப்போம். போதை அது சாவின் பாதை. மேதையின் பாதையை அழிக்கும் போதை அது. போதை ஒழிப்போம், சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்போம்.

எபேசியர் 5:18 **“திராட்சரசத்தினால் வெறிகொள்ளாதிருங்கள், அதில் கெடுதல் உண்டு, ஆவியினால் நிறைந்திருங்கள்.”**
போதையால் அல்ல, பரிசுத்த ஆவியால் நிரம்பிய வாழ்க்கை.

**Mrs . ஜான்சி ஜெபஸ்டின்**

# கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ பண்புகள்

## இரக்கமுள்ளவர்கள்

**“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.” (மத்தேயு 5:7)**

மத்தேயு 5-ஆம் அதிகாரத்தில் இயேசு வழங்கிய மலைப்பொழிவு (Sermon on the Mount) கிறிஸ்தவ வாழ்வின் அரசியலமைப்புச் சட்டம் எனக் கருதப்படுகிறது. இந்தப் பகுதியில் இயேசு உலகம் பார்க்கும் பாக்கியத்தை அல்ல, தேவன் பார்க்கும் பாக்கியத்தைப் பேசுகிறார்.

உலகம் சொல்வது:

- பணமுள்ளவன் பாக்கியவான்
- அதிகாரமுள்ளவன் பாக்கியவான்
- பழிவாங்குபவன் வலிமையுள்ளவன்

ஆனால் இயேசு சொல்வது:

- ஏழை மனதுள்ளவர்கள் பாக்கியவான்கள்
- துக்கப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்
- சாந்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்
- இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

இங்கே இயேசு ஒரு புரட்சிகரமான உண்மையை அறிவிக்கிறார்.

இரக்கம் காட்டுகிறவன் பலவீனன் அல்ல, அவன் தேவனுடைய இருதயத்தை உடையவன்.

தமிழில் “இரக்கம்” என்றால்: பரிதாபம் மனஉருகுதல் உதவிக் கருணை பிறருடைய வேதனையை உணர்தல். ஆனால் திருமறையில் இரக்கம் என்பது வெறும் உணர்ச்சி அல்ல. இரக்கம் பிறரின் வேதனையை உணர்ந்து செயலால் அன்பைக் காட்டுவதாகும். ஒருவர் அழுவது பார்த்து வருந்துவது அனுதாபம். அவரைத் தூக்கி நிறுத்துவது இரக்கம்.

நல்ல சமாரியன்  லூக்கா 10 ஆசாரியன் பார்த்தான். லேவியன் பார்த்தான். ஆனால் சமாரியன் மட்டும்:  அருகே சென்றான், காயங்களை கட்டினான், செலவு செய்தான். அது தான் இரக்கம்.

மத்தேயு ஹென்றியின் கருத்து

'Mercy is compassion in action."

“செயலில் வெளிப்படும் கருணையே இரக்கம்.”

வார்த்தைகளில் இரக்கம் எளிது. செயல்களில் இரக்கம் கடினம்.

**1. தேவனுடைய குணாதிசயம் – இரக்கம்**

மனிதன் இரக்கமுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதற்குக் காரணம்:

நாம் இரக்கமுள்ள தேவனின் பிள்ளைகள்.

சங்கீதம் 103:8

“கர்த்தர் இரக்கமும் கிருபையும் உள்ளவர்.”

தேவனுடைய இயல்பு என்ன? நீதிமான் பரிசுத்தர், ஆனால் அதே சமயம் இரக்கமுள்ளவர்.

எபேசியர் 2:4–5 “இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன்…”

நாம் பாவிகளாக இருந்தோம். தேவன் என்ன செய்தார்? தண்டிக்காமல் இரட்சித்தார். இதுவே இரக்கம்.

ஆகஸ்டினின்

'God|s mercy found us when we were lost."

“நாம் தொலைந்திருந்தபோது தேவனுடைய இரக்கம் நம்மைக் கண்டுபிடித்தது.”

நாம் தேவனை முதலில் தேடவில்லை. அவர் நம்மைத் தேடினார். அதுவே கிருபை.

**2. இயேசுவின் வாழ்க்கையில் இரக்கம்**

இயேசுவின் ஊழியத்தை ஒரே சொல்லில் விவரிக்க வேண்டுமெனில்:

இரக்கம்.

மத்தேயு 9:36

“ஜனங்களைப் பார்த்து அவர்கள்மேல் மனதுருகினார்.” இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்தார்.

அவர்களுக்கு இருந்தது  பசி நோய் குழப்பம் ஆவிக்குரிய வெறுமை

அவர் கோபப்படவில்லை. அவர் மனதுருகினார்.

ஜான் கல்வின்

"Christ did not merely teach mercy@ He embodied mercy."

“கிறிஸ்து இரக்கத்தை போதித்தவர் மட்டும் அல்ல, இரக்கமாகவே வாழ்ந்தார்.

மார்ட்டின் லூத்தரின் கருத்து

"Faith without mercy is empty religion."

“இரக்கம் இல்லாத விசுவாசம் வெறும் மதவழக்கம்.”

நாம் ஆலயத்திற்கு வரலாம் பாடலாம் ஜெபிக்கலாம்

ஆனால் இரக்கம் இல்லையெனில், நம்முடைய பக்தி முழுமையற்றது.

**3. நம்முடைய வாழ்வில் இரக்கம் இருக்க வேண்டும்.**

**லூக்கா 6:36**

“உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.”

இது ஆண்டவரின் கட்டளை.

இன்று உலகத்தில் இரக்கம் குறைந்து வருகிறது.

மனிதர்கள்:

- வேகமாக தீர்ப்பு சொல்கிறார்கள்
- மன்னிக்க விரும்பவில்லை
- உதவாமல் விமர்சிக்கிறார்கள்

ஆனால் கிறிஸ்தவர்கள் வேறுபட்டவர்களாக இருக்க

நாம் இரக்கம் பெற்றவர்கள்.

அதனால் இரக்கம் பேசுவோம், இரக்கம் காட்டுவோம், இரக்கம் வாழ்வோம். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள். ஆமென்.

**By Mrs. P. Johnsy Jebastin**

# சின்ன சின்ன சிந்தனைகள்

## “நன்றி”

நன்றியைப் பொறுத்த அளவில் மூவகை மனிதர்கள்:

1. **பெற்ற நன்மைக்கு நன்றி சொல்லாதவர்கள்**
   - இழிபிறவிகள்
   - மற்றவர்கள் இருப்பது தங்களுக்காகத்தான் என்ற சுயநல பார்வை கொண்டவர்கள்.
   - வாழ்க்கையை ரசிக்க இயலாதவர்கள்.
   - எல்லாவற்றிலும் குறைகளைக் காண்பவர்கள்.
   - ‘...உலகத்தில் எதுவுமே சரியில்லை’ என்பது போன்ற குற்றம் சொல்லுதலும், எதிர்மறை விமர்சனமும் இவர்களிடம் அதிகம் காணப்படும்.

2. **பெற்ற நன்மைக்கு மட்டும் நன்றி சொல்பவர்கள்**
   - வாழ்க்கையின் மட்டில் முழுமையான கண்ணோட்டம் கொண்டவர்களல்ல. அதாவது துன்பம் தேவையில்லை என்று நினைப்பவர்கள். எனவேதான் அவற்றுக்கும் நன்றி சொல்வதில்லை.
   - தாங்கள் துன்பம் என்று கருதுபவற்றிலும், தங்களுடைய வாழ்வை வளப்படுத்தக்கூடிய அம்சங்கள் உண்டு என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள்.
   - வாழ்க்கையில் நன்மையானவற்றைப் பெறும்போது வானில் பறப்பார்கள், துன்பங்கள் வரும்போது துவண்டுவிடுவார்கள். அதாவது ஒரு சமநிலை இவர்களிடம் காணப்படாது.

3. **எல்லாவற்றிற்கும் நன்றி சொல்பவர்கள்**
   - வாழ்க்கையின் மட்டில் நிறைவான கொண்டிருப்பவர்கள். பார்வை
   - பலரும் வெறுக்கின்ற ஒன்றில்கூட பாஸிட்டிவான விஷயம் இருப்பதை எடுத்துரைக்கும் பண்பாளர்கள்.
   - எவ்வளவு மோசமான சூழலிலும் நம்பிக்கை இழக்காதவர்கள்.
   - முறுமுறுத்தலும், முணுமுணுத்தலும் இவர்களிடம் மிகக் குறைவாகக் காணப்படும்.
   - வாழ்வை சமநிலையோடு அணுகுபவர்கள்.

Compiled by - Mrs P. Johnsy

# திருமறை அறிவுப்போட்டி ஜூன் 2026

## ஆதியாகமம் 1-5 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 21.06.2026)**

1. கூடாரங்களில் வாசம் பண்ணுபவர்களுக்கு தகப்பன் யார்?
2. பொன் விளையும் தேசம் எது?
3. நோவா என்பதன் பொருள் என்ன?
4. தேவன் படைத்த பெரிய சுடர் எது?
5. திருமறையில் அதிக நாட்கள் உயிரோடிருந்தவன் யார்? அவன் வாழ்ந்த வயது என்ன?
6. தேவனால் பரிசுத்தமாக்கப்பட்ட நாள் எது?
7. ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் யார்?
8. சர்ப்பத்தின் தலையை நசுக்குபவர் யார்?
9. தேவன் கடல் உயிரினங்கள் மற்றும் பறவைகளை எந்த நாளில் படைத்தார்?
10. வேறுபட்டது எது?

# மே 2026 - சரியான விடைகள்

## சங்கீதம் 146-150 அதிகாரங்கள்

1. கர்த்தருடைய மகிமை (148:13)
2. பிரபுக்களும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரர்களும் (146:4)
3. துரத்துண்ட இஸ்ரவேலர் (147:2)
4. சாந்தகுணமுள்ளவர்களை (149:4)
5. பரிசுத்தவான்களுடைய (149:8)
6. ஆகாய விரிவு (150:1)
7. சுரமண்டலத்தால் (147:7)
8. வாசல்களின் தாழ்ப்பாள்களை (147:13)
9. கர்த்தர் (146:7)
10. எருசலேமை (147:2)

# திருமறை அறிவுப்போட்டி சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1 | Mrs. மினு பெர்மின் |
| 2 | Mrs. கிளாட்சிலி பினுகுமார் |
| 3 | Mrs. ஜாஸ்மின் ஜஸ்டின் |
| 4 | Mrs. பிரதீபா ராஜேஷ் |
| 5 | Mrs. கோல்டா கேத்தரின் |
| 6 | Mrs. ரோஸ்மின் கிருபா டார்வின் |
| 7 | Mrs. சபிதா அருண் |
| 8 | Mrs. ஆன்லெட் ஜட்சன் |
| 9 | Mrs. திவ்யா ஜோஸ் |
| 10 | Mrs. ஷெரின் ஜெபா |
| 11 | Mrs. நிஷா ஸ்டாலின் |
| 12 | Mrs. நித்தியா வின்சென்ட் |
| 13 | Mrs. பெனிஷா சிங் |
| 14 | Mrs. விஜயலதா |
| 15 | Mrs. அனிலா சதீஷ் |
| 16 | Mrs. ஷாலினி E |
| 17 | Mrs. ஜெப ஷாலு ஜெகன் |
| 18 | Mrs. லாறா சுபின் |
| 19 | Mrs. D. ஏஞ்சலின் அபிதா ஜாய் |
| 20 | Mrs. சுஜிலா சோமு |
| 21 | Mrs. வயோலா ஸ்டாலின் |
| 22 | Mrs. ஷாலினி டீனு |
| 23 | Mrs. வெனினா ஸ்டாலின் |
| 24 | Mrs. மெர்லின் ஹெர்பெர்ட் சுஜின் |
| 25 | Mrs. பொம்மி ராஜன் |
| 26 | Mrs. சிந்து மேரி |
| 27 | Mrs. ஜாஸ்மின் வசந்த் |
| 28 | Mrs. ஜேன் மிராக்கிலின் |

# சமூக சீர்திருத்தத்தில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு

## நவீனத் தமிழ் இலக்கியத்தின் விடிவெள்ளி
## மாயூரம் வேதநாயகம் பிள்ளை

தமிழ் இலக்கிய வானில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உதித்த ஒரு துருவ நட்சத்திரம் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. அவர் ஒரு நீதிபதி மட்டுமல்ல, நாவல் இலக்கியத்தின் தந்தை, இசை மேதை, சமூக சீர்திருத்தவாதி மற்றும் பெரும் கொடையாளி. தமிழ் உரைநடைக்கும், இசைத் தமிழுக்கும் அவர் ஆற்றிய தொண்டு காலத்தால் அழியாதது.

**இளமையும் கல்வியும்:**
திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள குளத்தூரில் பிறந்தவர் வேதநாயகம் பிள்ளை. இளமையிலேயே தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றார். இவரது நற்பண்புகளையும், மொழித்திறனையும் கண்டு ஆங்கில அரசு இவரை நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக நியமித்தது. இவரது திறமை இவரை விரைவிலேயே மாவட்ட முனிசீப் (நீதிபதி) நிலைக்கு உயர்த்தியது.

**செங்கோல் ஏந்திய செம்மல்:**
தரங்கம்பாடி, சீர்காழி, மாயூரம் ஆகிய இடங்களில் நீதிபதியாகப் பணியாற்றியபோது, "நீதி தவறாத நேர்மையாளர்" என்ற பெயரைப் பெற்றார். வழக்குகளைத் தீர்க்கும்போது செல்வந்தர் - ஏழை, உறவினர் - மற்றவர் என்ற பாகுபாடு அவரிடம் இருந்ததில்லை. சட்டத்தின் நுணுக்கங்களை விட, அறத்தின் பாற்பட்ட உண்மையை உணர்ந்து தீர்ப்பு வழங்குவதே இவரது பாணியாக இருந்தது.

**முதல் தமிழ் நாவலின் தந்தை:**
தமிழில் உரைநடை இலக்கியம் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், '**பிரதாப முதலியார் சரித்திரம்**' என்னும் நூலை எழுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்தார். இதுவே தமிழின் முதல் நாவலாகும். வெறும் கற்பனைக் கதையாக மட்டுமில்லாமல், நகைச்சுவை ததும்ப நல்லறங்களைப் புகட்டும் நோக்கில் இதை அவர் படைத்தார். இந்த நாவலில் வரும் ஞானாம்பாள் போன்ற கதாபாத்திரங்கள் பெண்களின் அறிவுத்திறனுக்கும், ஆளுமைக்கும் சான்றாக விளங்குகின்றன.

**பெண் கல்வியின் முன்னோடி:**
பெண்கள் முன்னேற்றமடைந்தால் மட்டுமே நாடு உருப்படும் என்று அன்றே முழங்கியவர் வேதநாயகம் பிள்ளை. தன் மகள்களுக்காகவும், தமிழ்ச்

சமூகப் பெண்களுக்காகவும் '**பெண்மதி மாலை**' என்ற நூலை இயற்றினார். பெண்கல்வி, பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் இல்லறத்தை நடத்தும் முறை குறித்துப் பல கட்டுரைகளை எழுதி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**மனிதாபிமானத்தின் சிகரம்:**
தஞ்சை மண்ணில் கடும் பஞ்சம் ஏற்பட்டபோது, மக்களின் துயர் கண்டு கலங்கியவர் வேதநாயகம் பிள்ளை. "ஐயோ! மண்ணில் அநேகர் என் கண்முன்னே மாய்கின்றார்" என்று நெக்குருகிப் பாடியதுடன் நில்லாமல், தனது சொந்தப் பணத்தைச் செலவிட்டு மாயூரத்தின் பல இடங்களில் 'கஞ்சிச் சாலைகள்' அமைத்தார். ஆயிரக்கணக்கான ஏழைகளின் பசியைத் தீர்த்த இவரை இசை மேதை கோபாலகிருஷ்ண பாரதியார், "நீயே புருஷ மேரு" என்று பாடிப் புகழ்ந்தார்.

**சமய நல்லிணக்கத்தின் அடையாளம்:**
கிறித்தவ மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், மற்ற மதங்களைப் போற்றும் பக்குவம் கொண்டவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையுடனும், திருவாடுதுறை ஆதீனத் தலைவருடனும் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். மதச் சண்டைகளை வெறுத்த அவர், அனைத்து சமயத்தினரும் பாடும் வகையில் '**சர்வ சமய சமரசக் கீர்த்தனம்**' என்ற நூலை இயற்றிச் சமய நல்லிணக்கத்திற்கு வித்திட்டார்.

**இறுதிக்காலம் மற்றும் சேவை:**
பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் மக்கள் சேவையை விடாத அவர், மாயூரம் நகராட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுப் பல நற்பணிகளைச் செய்தார். தமிழ் மொழிக்கு நாவல் என்னும் புதிய இலக்கிய வடிவத்தைத் தந்தவர், இசைத் தமிழால் இறைவனைப் போற்றியவர், பஞ்ச காலத்தில் மக்களின் பசிப்பிணி போக்கிய வள்ளல் எனப் பன்முகத் திறமையோடு வாழ்ந்த வேதநாயகம் பிள்ளை, தமது 65-ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

நீதிபதி வேதநாயகம் பிள்ளை அவர்கள் தமிழுக்குத் தந்த 'பிரதாப முதலியார் சரித்திரம்' இன்று பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் புகழ் பெற்றுள்ளது. இலக்கியம், இசை, சமூகம், நீதி எனத் தான் தொட்ட துறைகளுக்கெல்லாம் பெருமை சேர்த்த அந்த மகத்தான மனிதரின் புகழ், தமிழ் இருக்கும் வரை நிலைத்து நிற்கும்.


ஆய்வுக் கட்டுரை ஆசிரியர்:
**மன்னா செல்வகுமார்**
கிறிஸ்தவ மரபு ஆய்வாளர்

# குறுக்கெழுத்து புதிர்

## வெளிப்படுத்தின விசேஷம் 9 - 13 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 21.06.2026)**

வயது : 13 வயதிற்கு மேல் உள்ளவர்கள்




**மேலிருந்து கீழ்**

1. பாதாளக்குழியின் புகையிலிருந்து புறப்பட்டு வந்தது எது?
2. தேனைப்போல மதுரமாயிருந்தது எது?
3. இறப்புக் கோலால் ஆளுகை செய்பவர் யார்?

**கீழிலிருந்து மேல்**

4. 'சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ' – யாரைக் குறிக்கிறது?
5. அபெத்தோன் என்பது எந்த தூதனைக் குறிக்கிறது?

**வலமிருந்து இடம்**

6. பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவ மரங்கள் யார்?
7. சமுத்திரத்தினின்று எழும்பி வந்த மிருகம் எதை போலிருந்தது?

**இடமிருந்து வலம்**

8. புகை எங்கிருந்து எழும்பிற்று?
9. ஏழாம் தூதன் எக்காளம் ஊதப்போகிறபோது நிறைவேறுவது எது?
10. சோதோம், எகிப்து என்று சொல்லப்படும் நகரம் எது?

(குறுக்கெழுத்து புதிர் போட்டியில் கலந்து கொள்வோர் விடைகளை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் நிரப்பி தரவும்.)

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடைகள் (வெளிப். 1-8)

| **மேலிருந்து கீழ்** | | **கீழிருந்து மேல்** | |
|---|---|---|---|
| 1 | கழுகு (4:7) | 3 | இரத்தம் (6:12) |
| 2 | பத்மு தீவு (1:9) | 4 | தூபவர்க்கம் (5:8) |
| **வலமிருந்து இடம்** | | **இடமிருந்து வலம்** | |
| 5 | பெர்கமு (2:13) | 8 | நிக்கோலாய் (2:6) |
| 6 | நட்சத்திரம் (8:11) | 9 | இருபத்து நான்கு (5:14) |
| 7 | ஏழு (1:4) | 10 | தியத்தீரா (2:24) |

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடை எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | Nisha Stalin | 14 | Angelin Abitha Joy |
| 2 | Anlet Judson | 15 | Nithya Vincent |
| 3 | Gladsily Binukumar | 16 | Shalini Teenu |
| 4 | Rosemine Kiruba Darwin | 17 | Merlin Herbert Sujin |
| 5 | Pradeepa Rajesh. T. | 18 | Divya Jose |
| 6 | Golda Catherene | 19 | Lara Subin |
| 7 | Sherin Jeba R. | 20 | Sindhu Mary |
| 8 | Venina Stalin | 21 | Viola Stalin |
| 9 | Sabitha Arun | 22 | Vijaya Latha |
| 10 | Minu Bermin | 23 | Sujila Somu |
| 11 | Benisha Singh | 24 | Jasmine Vasanth |
| 12 | Shalini E | 25 | Jane Miracline |
| 13 | Jeba Shalu Jegan | | |

# KIDS STORY TIME

## "The Magic of the Missing Schoolbag"

**Proverbs 21:20** "The wise store up choice food and olive oil, but fools gulp theirs down."

Arun was a young schoolboy who was always in a hurry. One Monday morning, he was late for school. He quickly took his shoes and lunchbox, but forgot his schoolbag.

When his mother reminded him, Arun looked everywhere for it. He searched under the bed, behind the sofa, and even in strange places, but the bag was missing.

Suddenly, a magical creature appeared near the window. It was Bibo, the Keeper of Lost Things. Bibo said that it takes away things that are forgotten or not cared for properly.

Arun was surprised. He said he did not forget his bag. But Bibo asked him if he had packed it carefully. Arun remembered that he had been careless the night before.

He understood his mistake and said sorry. He promised to be responsible. Then, Bibo returned the schoolbag. It was neatly packed and looked special. From that day, Arun became careful with his belongings. He learned that caring for things is important.

**Moral: We should take care of our belongings, because carelessness leads to loss.**

Wisdom includes careful management, not careless waste.

**Miss. D.J. Godlin**

# YOUTH SERMON

## "Freedom That Builds, Not Freedom That Breaks"

Dear teenagers
Once again, I greet you all in the name of our lord and saviour Jesus Christ.

**Key Verse**
"I have the right to do anything," you say but not everything is beneficial. "I have the right to do anything" but I will not be mastered by anything. (1 Corinthians 6:12)

Today, many young people think freedom means doing whatever they want. The world says, "Do what feels right" or "No one should control you." At first, this sounds exciting and powerful. But the Bible gives a deeper meaning of freedom.

The Apostle Paul says that even if we are allowed to do many things, not everything is helpful. This means that just because something is possible does not mean it is good for us. Some habits may not look wrong, but they can still harm our life. Too much social media, games, or bad friendships can slowly affect our studies, time, and relationship with God.

Paul also says, "I will not be mastered by anything." This is very important. It means we should not become slaves to anything in life. Sometimes, people think they are in control, but later they find that habits are controlling them. What starts small can become a strong habit that is hard to break.

True freedom is not doing everything we want. True freedom is being able to say "no" to things that can control us and "yes" to things that build our life. A strong Christian youth is not the one who does everything, but the one who chooses wisely.

The Bible also teaches this truth in other places. God told Cain that sin wants to control him, but he must rule over it (Genesis 4:7). This shows that either we control sin, or sin controls us.

Jesus said, “The truth will set you free” (John 8:32). Real freedom comes when we follow Jesus and live in His truth. It is not freedom away from God, but freedom with God.

In conclusion, real freedom is not doing everything we want. Real freedom is choosing what is good and refusing what can control us. A life led by Christ is the true and lasting freedom.

**Rev J. D.R.Jebastin**

# Streams for the soul

## Moody's Business Mind

"He spake boldly in the name of the Lord Jesus and disputed against the Grecians," (Acts 9:29).

D. L. Moody had a passion for souls and one night as he was going home, he saw a man leaning against a lamp-post. Moody approached him and asked him if he was a Christian. The man got angry, raised his fist and said, "Mind your own business." Moody with all calmness told him, "I am sorry if I have offended you; but to be frank, that is my business!" Understanding the situation, Moody left quietly.

Couple of months later, there was a knock on Moody's door. He opened it and saw a stranger who wanted to speak to him. The man began without any introduction; "I apologize for my rude behaviour that night beside the lamp-post. Since that night I had no peace in my heart. Now I want to become a Christian. Will you help me?" Moody then led him to the Saviour.

We are often brave and bold to talk of our business, bonds, stocks, gold and all worldly matters, but timid and silent about Christ and His love.

"I sought for a man among them, that should make up the hedge, and stand in the gap before me," (Eze. 22:30).

Compiled by **D.J. Godlin**

# இறை பிரசன்னத்தில் !

*எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம். 1 தீமோத் 2:1*

- உலக சமாதானத்திற்காக, வன்முறைகள், தீவிரவாதங்கள் ஒழிய .....
- தற்போதைய உலகத்தில் நடக்கின்ற யுத்தங்கள் மாற ஆண்டவரின் பாதத்தில் மன்றாடுவோம்.
- இயற்கையின் நல் பாதுகாப்பு பாதுகாப்பிற்காகவும் பராமரிப்புக்காகவும்
- அனுதின பிரயாணங்களை மேற்கொள்ளுவதற்காக ......
- உலக திருச்சபைகளுக்காகவும் இந்திய திருச்சபைகளுக்காகவும் மன்றாடுவோம்.
- தென்னிந்திய திருச்சபைக்காகவும் அதன் அனைத்து பேராயர்கள் மற்றும் அவர்களது திருப்பணிகளுக்காகவும் வேண்டுதல் செய்வோம்.
- கன்னியாகுமரி பேராயத்திற்காய் மன்றாடுவோம் .....
- நமது திருச்சபைக்காகவும் அதன் ஊழியங்களுக்காகவும் மற்றும் ஜூனியர் சர்ச் பெண்களுக்குச் சங்கம் ஆகியவற்றிற்காகவும் ஆண்டவரின் சமூகத்தில் மன்றாடுவோம்.
- நம்முடைய திருச்சபைக்கு வந்து கொண்டிருக்கும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்காக மன்றாடுவோம். குறிப்பாக அவர் தங்கியிருக்கின்ற முகாம்கள் மற்றும் இடங்களில் ஆண்டவருடைய பாதுகாப்பு எப்பொழுதும் அவர்களோடு இருக்க மன்றாடுவோம்.
- கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் அனைத்து ஊழியங்களுக்காக மற்றும் அருள்பணியாளர்களின் பாதுகாப்புக்காக மன்றாடுவோம்.
- இந்திய தேசத்திற்காகவும் நாம் வாழும் UAE தேசத்திற்காகவும் அதன் தலைவர்களுக்காகவும் .....
- திருமணம் ஆகி புத்திர பாக்கியங்களுக்கு காத்திருப்போர்களுக்காக, கர்ப்ப ஸ்திரீகளுக்காக .....
- கடன் மற்றும் குடும்ப பிரச்சினைகள் பாதிக்கப்பட்டோருக்காக ......
- பலதரப்பட்ட பலவீனங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ......
- முதிர் வயதினரின் பாதுகாப்பிற்காக அவருடைய சுகத்திற்காக .....
- குழந்தை தொழிலாளர்கள் மற்றும் அவருடைய மறுவாழ்வுக்காக மன்றாடுவோம் .....
- உலகெங்கும் இருக்கின்ற அகதிகளுக்காக மன்றாடுவோம். அவர்கள் வாழ்க்கை தரம் உயர அவர்களும் எல்லா உரிமைகளும் பெற்று இந்த உலகத்திலே வாழ மன்றாடுவோம் .....
- போதை பழக்கத்திற்கு அடிமைப்பட்டு இருக்கின்ற மக்களுக்காக அவர்கள் மனம் திரும்பி புதிய வாழ்வு வாழ மன்றாடுவோம் .....
- புதிய வேலை வாய்ப்புகளை எதிர்நோக்கி காத்திருப்பவர்களுக்காக .....
- வேலைகளில் உயர்வை எதிர்பார்த்து இருப்பவர்களுக்காக .....
- இப்புதிய மாதத்தில் கர்த்தருடைய வழி நடத்துவதற்காக இறைவனிடம் வேண்டுவோம்.

## சிறுவர் பகுதி...

## COLOUR THE PICTURE

(Age 3-9 years)



# CHILDREN'S QUIZ CORNER

## Genesis: Chapters 1-5

(Age 10-18 years)

**1. Why was God sorry that He had created life to inhabit the earth?**

a. It was because the wickedness of man was very great.

b. It was because Adam ate the fruit of the knowledge of God and evil.

c. It was because they were not perfect.

d. It was because they refused to worship him.

**2. When did humankind become a living being/soul?**

A. When God shaped the human in His image

B. When God placed the human in the garden

C. When God took Eve out of Adam's side

D. When God breathed into the human's nostrils

**3. What was the name of Adam and Eve's third son, born to replace Abel**

A) Noah

B) Seth

C) Lamech

D) Enoch

**4. When did the Lord God walk in the garden?**

A) Early in the morning

B) At noon

C) In the cool of the day / in the evening

D) At midnight

**5. When God asked Cain where his brother Abel was, what was Cain's famous reply?**

A) "I do not know."

B) "He went to the field."

C) "Am I my brother's keeper?"

D) "He is offering a sacrifice."

**6. What did God tell the serpent?**

A. "Because you have done this, you are cursed above all livestock."

B. "You will crawl on your belly and eat dust all your life."

C. "I will put enmity between you and the woman."

D. All of the above

**7. What command did God give Adam concerning the tree of knowledge?**

A. He must not eat from the tree of the knowledge of good and evil.

B. He must water and care for the tree every day.

C. He must build an altar near the tree.

D. He must share the fruit of the tree with the animals.

**8. What mark did God place on Cain?**

A. A protective mark so no one would kill him.

B. A crown to make him a king.

C. A shining light on his forehead.

D. A mark showing he was blessed with riches.

**9. What is the name of the third river mentioned in Genesis ?**

A. Nile

B. Jordan

C. Hiddekel

D. Euphrates

**10. Why did Adam name his wife Eve?**

A. Because she was the mother of all living people

B. Because she was the first woman created in the garden

C. Because she disobeyed God in the garden

D. Because she was created from the dust of the ground

## Children's Quiz Corner - May 2026 Answers

### Psalms 146-150

| | |
|---|---|
| 1 | C. Praise the Lord |
| 2 | D. Those who hope in the Lord their God |
| 3 | D. Frustrates them |
| 4 | C. Dancing |
| 5 | B. All his angels |
| 6 | D. That they will never pass away |
| 7 | C. Fathers |
| 8 | C. Jerusalem |
| 9 | B. The Lord's laws |
| 10 | B. He casts them to the ground |

# சிறுவர் பகுதி போட்டியில் பங்கேற்றோர்

## Childrens Quiz Corner

| | | | |
|---|---|---|---|
| 1 | B. Timothy Bermin | 11 | S. Johan |
| 2 | Aafreen B. Baron | 12 | Ziyola Linzia |
| 3 | Aashi B Buena | 13 | Akshel Hans A.S. |
| 4 | K. Jovan Fedrick | 14 | Johan Sujin |
| 5 | K. Ferona Katie | 15 | Stebin Linto |
| 6 | Johan Judson | 16 | Arshit H. |
| 7 | Dallin Bryant | 17 | |
| 8 | S. Bertina | | |
| 9 | Jefna John | | |
| 10 | Berniha Stalin | | |

## Coloring

| | | | |
|---|---|---|---|
| 1 | Chris Bermin | 11 | Shiona Binara |
| 2 | S. Bertina Stalin | 12 | Jaffrin Hayra |
| 3 | R.P. Evalyn Reeba | 13 | D.J. David Gamaliel |
| 4 | Jaran Judson | 14 | Ellen Deborah |
| 5 | C. Jaffrin Hannah | 15 | Erin Deborah |
| 6 | R.P. Samuel Raj | 16 | Serafina Stalin |
| 7 | Sherah | 17 | V.M. Nynika |
| 8 | J.S. Kaariga Jeshal | | |
| 9 | Bertina | | |
| 10 | V.M. Arika | | |

# மருத்துவப்பகுதி

## Heat Stroke - ஹீட் ஸ்ட்ரோக்

**ஹீட் ஸ்ட்ரோக் எதனால் ஏற்படுகிறது & தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

ஹீட் ஸ்ட்ரோக் என்பது கோடை காலத்தில் ஏற்படும் ஒரு தீவிரமான, உயிருக்கு ஆபத்தான நிலையாகும். அதிக தண்ணீர் குடிப்பது, வெயிலைத் தவிர்ப்பது, மற்றும் சரியான முதலுதவி மூலம் இந்த ஆபத்தைத் தடுக்கலாம். இது சாதாரண சோர்வு அல்ல, கோடை காலம் தொடங்கியவுடன் வெயிலின் தாக்கமும் அதிகரிக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரை பல இடங்களில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைத் தாண்டுகிறது. இப்படிப்பட்ட கடுமையான வெப்பத்தில் நீண்ட நேரம் இருப்பது உடலுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதில் மிகவும் ஆபத்தான நிலை தான் ஹீட் ஸ்ட்ரோக் (Heat Stroke).

இது சாதாரண சோர்வு அல்ல. உடலின் வெப்பநிலையை கட்டுப்படுத்தும் இயல்பு செயல்முறை முற்றிலும் செயலிழந்து, உடல் மிக அதிகமாக சூடாகும் உயிருக்கு ஆபத்தான அவசர நிலையாகும். உடனடி சிகிச்சை கிடைக்காவிட்டால் மூளை, இதயம், சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புகள் பாதிக்கப்படலாம்.

**ஹீட் ஸ்ட்ரோக் என்றால் என்ன?**

பொதுவாக மனித உடல் தனது வெப்பநிலையை வியர்வை மூலம் கட்டுப்படுத்துகிறது. ஆனால் கடுமையான வெப்பம், நீரிழப்பு மற்றும் அதிக உடல் உழைப்பு காரணமாக இந்த கட்டுப்பாட்டு அமைப்பு செயலிழக்கும் போது உடல் வெப்பநிலை திடீரென 40°C அல்லது அதற்கு மேல் உயர்கிறது. இதுவே ஹீட் ஸ்ட்ரோக் எனப்படுகிறது. இது குறிப்பாக வெளியில் வேலை செய்பவர்கள், விவசாயிகள், கட்டுமானத் தொழிலாளர்கள், முதியவர்கள், குழந்தைகள் மற்றும் உடல்நலப் பிரச்சனை உள்ளவர்களுக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்துகிறது.

**ஹீட் ஸ்ட்ரோக் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள்**

*1. அதிக வெப்பத்தில் நீண்ட நேரம் இருப்பது*

கடுமையான வெயிலில் நீண்ட நேரம் நடப்பது, வேலை செய்வது அல்லது பயணம் செய்வது உடலின் வெப்பத்தை அதிகரிக்கிறது. குறிப்பாக மதிய நேர வெயில் மிகவும் ஆபத்தானது.

*2. நீரிழப்பு (Dehydration)*

போதுமான அளவு தண்ணீர் குடிக்காமல் இருப்பது ஹீட் ஸ்ட்ரோக்கிற்கு முக்கிய காரணம். உடலில் வியர்வை மூலம் நீர் வெளியேறும்போது அதை மீண்டும் நிரப்பவில்லை என்றால் உடல் வெப்பம் வேகமாக உயரும்.

*3. அதிக உடற்பயிற்சி*

கோடை காலங்களில் வெயிலில் ஓட்டம், ஜிம் பயிற்சி அல்லது கடுமையான உடல் உழைப்பு செய்வது உடலின் வெப்பத்தை திடீரென உயர்த்தும்.

*4. இறுக்கமான மற்றும் தடிமனான ஆடைகள்*

காற்றோட்டமில்லாத ஆடைகள் உடலில் வெப்பத்தை அடைத்து வைக்கும். இதனால் உடல் இயல்பாக குளிர முடியாது.

*5. காற்றோட்டமில்லாத சூழல்*

அதிக வெப்பமுள்ள அறைகள், தொழிற்சாலைகள் அல்லது ஏசி இல்லாத மூடப்பட்ட இடங்களில் நீண்ட நேரம் இருப்பதும் ஹீட் ஸ்ட்ரோக்கை ஏற்படுத்தும்.

**ஹீட் ஸ்ட்ரோக்கின் முக்கிய அறிகுறிகள்**

ஹீட் ஸ்ட்ரோக் ஏற்பட்டால் உடல் சில எச்சரிக்கை அறிகுறிகளை காட்டும். அவற்றை உடனே கவனிக்க வேண்டும்.

- உடல் வெப்பநிலை 40°C அல்லது அதற்கு மேல் உயர்வது
- வியர்வை குறைவது அல்லது உடல் வறண்டு காணப்படுவது
- தோல் சிவந்து சூடாக இருப்பது
- கடுமையான தலைவலி தலைச்சுற்றல் மற்றும் வாந்தி உணர்வு
- நாடித் துடிப்பு வேகமாக இருத்தல்
- மூச்சு விட சிரமம் குழப்பம்,
- உளறல் அல்லது பிரமை மயக்கம் அல்லது சுயநினைவு இழப்பு

இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஹீட் ஸ்ட்ரோக் ஏற்பட்டால் செய்ய வேண்டிய முதலுதவி**

- உடனே குளிர்ச்சியான இடத்திற்கு மாற்றுங்கள்
- பாதிக்கப்பட்டவரை வெயிலிலிருந்து உடனடியாக நிழல் அல்லது ஏசி உள்ள இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.
- உடலை குளிர்விக்க வேண்டும்.

- ஆடைகளை தளர்த்தி குளிர்ந்த நீரால் உடலை துடைக்க வேண்டும். கழுத்து, அக்குள், தொடை போன்ற பகுதிகளில் ஐஸ் கட்டி வைத்தால் வெப்பம் குறைய உதவும்.
- நபர் சுயநினைவுடன் இருந்தால் மெதுவாக தண்ணீர் அல்லது ORS பானம் கொடுக்கலாம்.
- உடனடி மருத்துவ உதவி பெற வேண்டும்
- மயக்கம், குழப்பம் அல்லது சுயநினைவு இழப்பு இருந்தால் தாமதிக்காமல் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

**செய்யக்கூடாத தவறுகள்**

- காபி, டீ அல்லது மதுபானங்கள் கொடுக்கக் கூடாது
- சுயநினைவில்லாதவருக்கு தண்ணீர் வலுக்கட்டாயமாக கொடுக்கக் கூடாது
- "சில நேரத்தில் சரியாகிவிடும்" என்று அலட்சியம் செய்யக்கூடாது

**ஹீட் ஸ்ட்ரோக்கைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

- அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும்
- தினமும் குறைந்தது 3–4 லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம். தாகம் இல்லாவிட்டாலும் இடைவெளியில் தண்ணீர் குடிக்க வேண்டும்.
- மதிய வெயிலைத் தவிர்க்க வேண்டும்
- மதியம் 12 மணி முதல் 3 மணி வரை வெளியே செல்வதை குறைக்க வேண்டும்.
- சரியான ஆடைகள் அணியுங்கள்
- மெலிதான, வெளிர் நிறம் கொண்ட பருத்தி ஆடைகள் உடலுக்கு குளிர்ச்சியை தரும்.
- குடை மற்றும் தொப்பி பயன்படுத்துங்கள்
- வெளியே செல்லும்போது குடை, தொப்பி, குளிர்கண்ணாடி போன்றவற்றைப் பயன்படுத்துவது நல்ல பாதுகாப்பு தரும்.
- ழுசுளு மற்றும் பழச்சாறுகள் அருந்துங்கள்
- தண்ணீருடன் சேர்த்து எலக்ட்ரோலைட் பானங்கள், மோர், இளநீர், தர்பூசணி போன்ற நீர்ச்சத்து அதிகமான உணவுகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**யாருக்கு அதிக ஆபத்து?**

முதியவர்கள் குழந்தைகள் கர்ப்பிணிப் பெண்கள் இதயம் மற்றும் சர்க்கரை நோயாளிகள் வெளியில் வேலை செய்பவர்கள் உடற்பயிற்சி அதிகம்

செய்வோர் இவர்கள் கோடை காலங்களில் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும்.

**ஹீட் ஸ்ட்ரோக் என்பது சாதாரண வெப்ப சோர்வு அல்ல**

ஹீட் ஸ்ட்ரோக் என்பது சாதாரண வெப்ப சோர்வு அல்ல் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அவசர மருத்துவ நிலை. ஆரம்ப அறிகுறிகளை கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்தால் பெரிய ஆபத்துகளைத் தவிர்க்க முடியும். குறிப்பாக கோடை காலங்களில் போதுமான தண்ணீர் குடிப்பது, வெயிலைத் தவிர்ப்பது மற்றும் உடலை குளிர்ச்சியாக வைத்திருப்பது மிகவும் அவசியம். சிறிய கவனக்குறைவுதான் பெரிய பிரச்சனையாக மாறும் என்பதை மறக்காதீர்கள்.

**திருமதி. சபிதா அருண்குமார்**





## 2026 ஆராதனை ஒழுங்குகள்

இடம்: Hall No. 10 - Union Church

**ஞாயிறு ஆராதனை**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 6:30 மணி

**தூய நற்கருணை ஆராதனை**
மாதத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**உபவாச ஜெபக் கூடுகை**
மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை
காலை 11:00 மணி

**வீட்டு ஜெபக் கூடுகை**
மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை
இரவு 7:00 மணி

**துதி ஆராதனை**
மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**பாடல் ஆராதனை**
மாதத்தின் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**திருமறைப் பள்ளி வகுப்பு**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 7:00 மணி

**பெண்கள் ஐக்கிய சங்கம்**
இரண்டு மற்றும் நான்காம்
ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி

**பாடகர் குழு பயிற்சி**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை
காலை 9:00 மணி

**ஜெப கூடுகை**
ஒவ்வொரு புதன்கிழமையும்
இரவு 8:00 மணி

**SHARJAH TAMIL CONGREGATION** (CSI KANYAKUMARI DIOCESE)

P.O. BOX : 36378, Sharjah, U.A.E. TEL. : 06-5680727, Mobile : 050-936 7576